Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

போன். 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபால் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 14 ஆம் நாள | றஜபு 20 | (29-12-61) | வெள்ளிக்கிழமை | இதழ் 272

# ராணுவத்தை வாபஸ் பெறமுடியாது

## தொழிலாளர் வேலைக்குத் திரும்பினால்ராணுவம்ஏன்?

### பிரதமர் சிறிமா அறிக்கை

### அடையாள ஒரு நாள் பொது வேலை நிறுத்தத்தை கைவிடகோரிக்கை

கொழும்பு, வெள்ளி

"துறைமுகத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்கள் எல்லோரும் வேலைக்குத் திரும்பி துறைமுகத்தில் சீரான நிலைமை ஏற்படும் வரை துறைமுகத்திலிருந்து ராணுவத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று விடுத்த ஒரு அறிக்கையில் அறிவித்துள்ளார்.

துறைமுகத் தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டுமென்றும் ஜனவரி மாதம் மூன்றாந் திகதி நடத்த உத்தேசித்திருக்கும் ஒரு நாள் அடையாள பொது வேலை நிறுத்தத்தை அரசாங்க ஊழியர் தொழிற் சங்க சம்மேளனமும் இதர தொழிற் சங்க முன்னணிகளும கைவிடவேண்டுமென்றும் பிரதமர் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தினால் தொழிலாளர்களும் நாட்டு மக்களும் பெரும் கஷ்டமடைந்துள்ளனர். வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது. நாட்டின் ஒருகோடி மக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் இறக்குமதியாகின்றன. இவற்றை இறக்குமதி செய்வதற்கானசெலவை ஈடுபடுத்துவதற்குநாட்டின் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டும். எனவே அத்தியாவசிய உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் உள்நாட்டு உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கும் ராணுவத்தினரைஉபயோகிப்பதைத் தவிர வேறுவழியில்லை.

துறைமுகத்தில் வேலைநிறுத்தங்கள் நடைபெறும்பொழுது ராணுவத்தினரை உபயோகிப்பது இதுதான் முதற்தடவையல்ல. இதற்கு முன்னரும் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஒரு நாள் அடையாளவேலை நிறுத்தத்தினாலோ தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வதாலோ துறைமுகத்திலிருந்து ராணுவத்தை வாபஸ்செய்துவிடமுடியாது.

ராணுவத்தை துறைமுகத்தில் உபயோகிப்பது தொழிலாளர்களை நசுக்கும் நோக்கத்துடனல்ல. தொழிலாளர்களின் உரிமைகளை அபிவிருத்திசெய்வதற்கும், தொழிற்சங்க வளர்

(8ம் பக்கம் பார்க்க)

---

## 'காஸ்' கம்பனி ஊழியர் வேலைக்குத் திரும்பினர்

கொழும்பு, வெள்ளி

சென்ற ஏழு தினங்களாக வேலைநிறுத்தம் செய்து வந்த கொழும்பு 'காஸ்' கம்பனி ஊழியர்கள் தங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புவதென்று நேற்று மாலை முடிவு செய்தனர். இந்த முடிவின்படி அவர்கள்நேற்று மாலை வேலைக்குத் திரும்பினர்.

'காஸ்' கம்பனி நிர்வாகிகளையும் ஊழியர்களின்பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு மகாநாட்டை தொழிற் கமிஷனர் கூட்டினார். இந்த மகாநாட்டில் இருதரப்பினருக்குமிடையில் சமரசமேற்பட்டது. மகாநாட்டின் முடிவில் ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு ஆலோசனை கூறப்போவதாக ஊழியர்கள் யூனியன் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இத் தகவலை தகவல் இலாகா ஒருஅறிக்கையில் தெரிவித்தது

---

## புதிய சந்தைக்கு ரூ. $2\frac{1}{2}$ லட்சம்

### மாநகரசபை பட்ஜட் அங்கீகாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண மாநகர சபையின் 1962ம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த புதன் கிழமை நடைபெற்ற மாநகர சபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 247,471 மாத்திரம் துண்டு விழுந்துள்ளது. இத் தொகை புதிய சந்தை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் 7 லட்ச ரூபாய்க்கு மேல் துண்டுவிழுந்த இதன் உத்தேச வரவு செலவுத் திட்டம் கடந்த 19ம் திகதி நடைபெற்ற சகல நிலையக் குழுக்களினதும் கூட்டத்தில் மேற் கண்டவாறு சரியாக்கப்பட்டது.

அதிகமான செலவினங்கள் இந்த பட்ஜட்டில் அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய சந்தை அமைப்புக்கு இந்த பட்ஜட்டில் ஒதுக்கப்பட்ட பகுதியை ஆதரித்து திருவாளர்கள் ஏ. ஜி. இராஜசூரியர், எம். ஜேக்கப், கே. எஸ். நடராசா, ஹாஜி வி. எம். எம். அபுசாலி, ஹாஜி எம். எம். சுல்தான் ஆகியோர் வாக்களிக்கவில்லை.

---

## தமிழ்க் காங்கிரஸ் புனரமைப்புத் திட்டம்

### யாழ்ப்பாணத்தில் பூர்வாங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசை புனருத்தாரணம் செய்வதற்கான ஆரம்பக் கூட்டமொன்று நேற்று முன்தினம் ஓட்டுமடத்தடியில் திரு. சி. நடராஜா வீட்டில் நடைபெற்றதாகத் தெரிகிறது. இக்கூட்டத்தில் 200 பேர் கலந்துகொண்டனர்.

தமிழ்க்காங்கிரசை புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்று கோரி கொழும்பிலிருந்து 500 பேர் கையெழுத்திட்டு அனுப்பிய ஒரு மகஜரைத் தொடர்ந்து இக்கூட்டம் நடைபெற்றது. மகஜரில் கையொப்பமிட்டவர்கள் சிலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கட்சியின் புனரமைப்பு சம்பந்தமாக ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபன தொகுதியிலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் இருவர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜனவரி 20-ந் திகதி கூடவிருக்கும் கூட்டத்தில் இந்த அங்கத்தவர்களும் கலந்து கொண்டு கட்சியின் புதிய திட்டம் பற்றி ஆராய்வர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

---

## பல்லாவரத்தில் இரும்புத் தொழிற்சாலை

சென்னை, டிச. 27

மாஜி ராணுவ வீரர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கென பல்லாவரத்தில் இரண்டரைலட்ச ரூபாய் மூலதனத்துடன் இரும்புத்தொழிற்சாலையொன்று அமைக்கப்படவிருக்கிறது.

---

## "வேலைநிறுத்தம் நியாயமற்றது"

### செனட்டர் நடேசன் கருத்து

கொழும்பு, வெள்ளி

"இப்பொழுது நடைபெறும் வேலைநிறுத்தம் முற்றிலும் நியாயமற்றது" என்று செனட்டர் எஸ். நடேசன் நேற்று செனட் சபையில் நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

தொழிற் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதற்கு தொழிற் தகராறுச் சட்டத்தின்கீழ் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறதென்றும் நியாயமற்ற வேலைநிறுத்தங்களுக்கு நாட்டை ஈடுவைக்க முடியாதென்றும் இது போன்ற நியாயமற்ற வேலை நிறுத்தங்களை எந்த அரசாங்கமும் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்றும் செனட்டர் நடேசன் கூறினார்.

---

## பௌத்த காங்கிரஸ் மகாநாடு

இரத்தினபுரி, வியாழன்

அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் 43 வது வருடாந்த மகாநாடு சனிக்கிழமை இரத்தினபுரி சீவாலி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

---

## பாகீஸ்தானில்பிரவேசித்ததாக 15 இந்தியர்களுக்கு சிறைத்தண்டனை

கராச்சி, டிச. 28

பாகிஸ்தான் எல்லையுள் சட்டவிரோதமாகப் பிரவேசித்ததாகக் குற்றம் சாட்டி 15 இந்திய தேசிய வாதிகளுக்கு ஒரு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக பாகிஸ்தானில் பிரவேசித்து பின்னர் பிரிட்டனுக்கு பொய்யான பாஸ்போர்ட்டுக்களுடன் செல்ல எத்தனித்தபோதே இவர்களைப் பாகிஸ்தான் பொலிசார் கைது செய்தனராம்.

இவ்விதம் சட்டவிரோதமாகப் பிரவேசித்ததாக மேலும் 30 இந்தியர் விசாரணை செய்யப்படவிருக்கின்றனர். இவர்களில் அதிகமானோர் சீக்கியர்களென்றும் தமது பெயர்களை முஸ்லிம் பெயர்களாக மாற்றி இப்பிரதேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தார்களென்றும் கூறப்படுகிறது.

# விவசாயப் பள்ளி மாணவிகளின் சிக்கன வாழ்க்கை

## திருநெல்வேலி பாடசாலையில் கூட்டுறவு உதவி ஆணையாளர் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"பள்ளிக்கூட மாணவிகள் செய்த பொருள்களை மிகவும் மகிழ்ச்சியுடனும் ஆச்சரியத்துடனும் பார்வையிட்டேன் பள்ளிக்கூட அதிபரின் அறிக்கையை மொழி காரணமாக முழுவதும் விளங்கிக்கொள்ள என்னால் முடியவில்லை. எனினும் ஓரளவுக்கு என்னால் கிரகிக்க முடிந்தது. எட்டாவது ஆண்டு விழாவை இன்று இந்தப் பள்ளிக்கூடம் கொண்டாடுகிறது என அறிகிறேன். எட்டுவருட காலத்தில் இந்தப் பள்ளிக்கூடம் அதிக முன்னேற்றமடைந்துள்ளது. இப்பேர்பட்ட பள்ளிக்கூடங்களில் மொழி ஒரு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டாது."

இவ்வாறு யாழ்ப்பாணம் திருநெல்வேலி பெண்கள் விவசாய பாடசாலையின் எட்டாவது ஆண்டுவிழாவில் பேசுகையில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்கஅதிபர் லெப்டினண்ட் ஐ. சமரவிக்கிரம கூறினர் விழாவுக்கு மாவட்ட கிருஷிக அதிபர் திரு. எஸ். கே. துரைசிங்கம் தலைமை வகித்தார்.

லெப்டினண்ட் சமரவிக்கிரம மேலும் பேசியதாவது:-

இலங்கையிலேயே முதன்மை மிக்க விவசாயக் கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கு இந்தப் பள்ளிக்கூட மாணவிகள் மூவர் உபகாரச்சம்பளம் பெற்றுள்ளது பாராட்டத்தக்கதாகும். விவசாயப் பயிற்சிக்கென்றே இப்பள்ளிக்கூடம் நிறுவப்பட்டுள்ளது. ஆனல் விவசாயம் மட்டுமன்றி எல்லாத்துறைகளிலும் மாணவிகள் ஓரளவுக்குப் பயிற்சி பெற்றுவருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். செயல்முறைக் கல்வியை நல்ல முறையில் மாணவிகள் கற்றுவருகிறார்கள் சகல வழியிலும் அரசாங்கத்தின் உதவியை நாம் எதிர்பார்க்கிறோம். ஆனல் இங்கு மாணவிகள் தமது முயற்சியினல் தோட்டப்பயிரிடுகையினின்றும் பெற்ற வருவாயைக்கொண்டு இந்தக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்துள்ளமை பலருக்கு உற்சாகமளிக்கிறது."

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு ஆசீர்வாதம் பேசும்போது கூறியதாவது:-

கோழிப்பண்ணை பற்றியும் மிருகவளர்ப்புபற்றியும் நாம் பல புத்தகங்களை வாசிக்கலாம். பல சொற்பொழிவுகளைக் கேட்கலாம். ஆனல் அவற்றைக்கொண்டு கோழிப்பண்ணைகளையும் பால்பண்ணைகளையும் நடத்திவிடமுடியாது. செய்கையில் அவற்றை நடாத்துவதைப் பார்வையிட்டு செய்பவர்களுடன் கலந்தாலோசித்தால்தான் அவற்றை நாம் நன்கு நடாத்தமுடியும். யாழ்ப்பாணத்துப் பெண்கள் கூட்டுறவு ஸ்தாபன வேலைகளில் ஈடுபடுவதில்லை. பள்ளிக்கூடத்தில் பயிற்சிபெற்ற மாணவிகள் கூட்டுறவுச்சங்கத்தில் சேர்ந்து உழைக்கவேண்டும் விவசாயபள்ளிக்கூடத்தில் பயிற்சிபெறும் மாணவிகள் சிக்கனமாக வாழப் பழகிக்கொள்ளுகிறார்கள். குடும்ப வாழ்க்கைக்கு அதிகம் உதவக்கூடிய கல்வியிலும் இந்தப் பெண்களை இளம் ஆடவர்கள் விரும்பி மணம்செய்துகொள்ள வேண்டும்."

பள்ளிக்கூட அதிபர் செல்வி மேதர், ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். மாணவிகளால் செய்யப்பட்ட பொருள்களின் கண்காட்சியும், மாணவர்கள் கலந்துகொண்ட கலைக்காட்சியும் இடம்பெற்றிருந்தன.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# சமநிலை யெய்திய வரவு செலவுத் திட்டம்

## பட்ஜட் கூட்டத்தில் மேயர் அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

"1962ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை ஓர் சமநிலையெய்திய வரவு செலவுத் திட்டமென்று சந்தேகமில்லாமல் உறுதிப்படுத்த முடியும். இந்நிலை தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்பட்டால் சகல பிரச்சினைகளும் நீங்கி நெருக்கடியிலிருந்துவிடுபட்டுவிடுவோம்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரசபையின் 1962-ம் ஆண்டுக்கான பட்ஜட் கூட்டத்தில் மேயர் திரு. டி. எஸ். துரைராசா சபையில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் கூறியிருப்பதாவது:-

ஆரம்பத்தில், மேலதிக உத்தியோகத்தர்களை வேலை நீக்கம் செய்து மீண்டு வரும் செலவுகளைத் தடை செய்வதற்கும், நிர்வாகச் செலவுகள் சம்பந்தமான மேலதிகச் செலவுகளையும் சரிப்படுத்துவதற்குமாகத் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நிதி நிலையைத்திருத்தி அமைத்து மீண்டும் சீர் கெடாமலிருப்பதற்காக இதர பல விஷயங்களிலும் செலவுகள் குறைக்கப்பட வேண்டியிருந்தது. ரூபா 142,879/- தொகையுள்ள பெருமளவு பற்ருக்குறையுடன் 1961ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. 1660ம் ஆண்டில் பிரதான வரவு செலவுத் திட்டத்தில் ஓர் போலி மிகைத் தொகயான ரூபா 9,121/-.

இருந்தாலும் உபவரவு செலவுத் திட்டம் பெருமளவு பற்ருக்குறைகளை ரூபா 656,949/- ரீதியில் காட்டியது.

1962-ம் ஆண்டிற்குரிய இறுதி வரவு செலவுத் திட்ட வழி வகைகளை நாம் பரிசீலனை செய்தால் பற்ருக்குறை ரூபா 153,091/- என்பதை அறிந்தாலும் புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் சந்தைக்காக ரூ. 225,000/- ஒதுக்கப்பட்டிருப்பதை நாம் எமது கவனத்திற்குக் கொண்டுவரவில்லை.

முன்பு ஒரு முறை நான் சமர்ப்பித்த அறிக்கையின்படி வாழ்க்கைப் படிச்செலவுகளும், விசேட செலவுப் படிகளும் மீளக் கொடுப்பதற்குரிய தொகையான ரூபா 213,573-80 நான் பலத்த நடவடிக்கைகள் எடுத்தும் உள்ளூராட்சி ஆணையாளரால் கொடுக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்ட வழிவகைகளில் ரூபா 697,200/- வருமானமாக இதன் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளது. இத் தொகை உள்ளூராட்சி ஆணையாளரால் இல்லாமற் செய்யப்பட்டாலும், சென்ற ஆண்டுகளின் மதிப்பீட்டுத் தொகைகளிலும் பார்க்க 91000/- ரூபாய் குறைந்துள்ளது. இக் காரணங்கள் எல்லாம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டால் 1962-ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத் திட்டத்தை ஓர் சம நிலையெய்திய வரவு செலவுத் திட்டமென்று சந்தேகமில்லாமல் உறுதிப்படுத்த முடியும். இந்நிலை தொடர்ச்சியாகப் பாதுகாக்கப்பட்டால் சகல பிரச்சினைகளும் நீங்கி நெருக்கடியிலிருந்து விடுபட்டுவிடுவோம்.

இந்த ஆண்டிற்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபா 4,000/- ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### மின்சார விஸ்தரிப்பு

அரசாங்க மின்சாரப் பகுதியிலிருந்து ஏற்கனவே உத்தரவு பெற்றே மின்சார வேலைகள் செய்யவேண்டுமென்றிருப்பதால் மின்சார விஸ்தரிப்பு வேலைகள் செய்ய முடியாமலிருப்பதற்காக நான் மனம் வருந்துகிறேன். இது சம்பந்தமாக அரசாங்க அமைச்சர்களுடனும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தினேன். மாநகர முதல்வர்கள் மகாநாட்டிலும் இது விஷயம் பற்றிப் பிரஸ்தாபித்துள்ளேன். மின்சார விஸ்தரிப்பு வேலைகளை வெகு விரைவில் நாம் செய்ய முடியுமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

வரி மதிப்பீட்டு நிலுவைகள் யாவையையும் வசூலிப்பதற்காக எடுக்கப்பட்ட நடிவடிக்கைகள் யாவும் சிறந்த பலன்களை அளித்துள்ளது. தகரக் கடைகள், சந்தைகளிலிருந்து வருமதியான நிலுவைகளில் நூற்றுக்கு 75% வசூலிக்கப்பட்டுள்ளது. வழக்குகள் தொடரப்பட்டதன் மூலமும் இதர பல தீவிரமான நடவடிக்கைகள் மூலமும் ஒரு லட்சத்துக்கும் கூடுதலான நிலுவைப் பணம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

பெறுமானம் மதிப்பீட்டு இலாகா தங்களது ஐந்தாண்டிற்குரிய மதிப்பீடுகளை இப்பொழுது தான் முடித்துள்ளார்கள். இந்த வித தவணைக்குரிய மதிப்பீடுகள் சட்டப்ப

( 3ம்பக்கம் பார்க்க )

# வானெலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வெள்ளி. 29-12-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 7-45 முத்துலட்சுமி குழந்தைவேல்-பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வி. சுப்பிரமணியம்—நாகஸ்வரம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 கோவில் அஞ்சல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 சுவாமி சச்சிதானந்தர்—பேச்சு, 9-30 எம். ஆர். சுயம்புலிங்கம்—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 குளிக்கரை எஸ். அருணகிரி—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 12-15 டி. எஸ். சுப்புலட்சுமி—புல்காங்குழல்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இசைவிழா—சென்னை அஞ்சல், 9-15 பல கணி, 10-00 இசைவிழா—சென்னை அஞ்சல்.

# "மாளவியா சர்வகலாசாலை"

லக்னே, டிச. 28

உத்தரப் பிரதேச மாளவியா நூற்ருண்டு விழாக் கமிட்டி, காசி ஹிந்து சர்வகலாசாலைக்கு மாளவியாவின் பெயரையே வைப்பதென ஏகமனதாய் முடிவு செய்தது.


# தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ

## உகந்தது ஜம்பிங் பிஷ்

### பிரிண்டட் பேப்ரிக்

தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, களமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் கிடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.



ஏக விநியோகஸ்தர்கள்:

ஸி. டப்ளியூ. ஈ

கிடைக்குமிடங்கள்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர், கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ, தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களேயே உங்களுக்கு அளிக்கின்றது

# மேற்கு இரியனை விடுவிக்க 1 லட்சம்

## சுமத்திராவாசிகள்

### எந்நேரமும் தயாராய் இருப்பதாக அறிவிப்பு

ஜாகர்த்தா, டிச. 28

இந்தோனேஷிய ஜனுதிபதி டாக்டர் சுகர்னேவும், வெளிநாட்டு மந்திரி திரு. சுபந்திரியோவும் மேற்கு இரியன் சம்பந்தமான விடுதலை சபையினருடன் பேச்சுவார்த்தை நடத்தினர் ஜாகர்த்தாவிலுள்ள அமெரிக்கத் தூதர் டாக்டர் சுகர்னேவைச் சந்தித்ததைத் தொடர்ந்து விடுதலை சபையுடன் இரு தலைவர்களுப் ஆலோசித்தனர்.

ஜனுதிபதி கென்னடியின் கடிதமொன்றை அமெரிக்க தூதர் இந்தோனேஷிய அதிபரிடம் ஒப்படைத்ததாய்த் தெரிகிறது. ஆனல் இச்செய்தி ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

மேற்கு இரியனை விடுவிக்க நடைபெற்ற ஆள் திரட்டலில் பல புராதன ஆயுதங்களுடன் ஒரு லட்சத்துக்கதிகமானேர் சுமத்திராவிலிருந்து வந்திருந்தாயும் விடுதலைக்காக அவர்கள் போராடத் தயாராய இருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## அங்கத்தவர் ராஜினமா

பருத்தித்துறை, வியாழன்

புலோலி இந்து ஆண்கள் கல்லூரியை அரசாங்கம் எடுத்துக்கொண்டதைத் தொடர்ந்து அக் கல்லூரியின் தற்போதைய தலைவர் திரு. ஆ. தங்கராசா பருத்தித்துறைப் பட்டினசபையின் அங்கத்துவ பதவியை ராஜினமாச் செய்துள்ளார் எனத் தெரியவருகிறது

## மேனன்

புதுடில்லி, டிச. 28

கோவாவில் இந்தியா நடவடிக்கை எடுத்துககொண்ட தன் விளைவால் உலகில் சுதந்திரப் பிராந்தியம் விரிவடைந்திருப்பதாயும், இது ஐ. நா. வைப் பலப்படுத்தியிருப்பதாயும் திரு. கிருஷ்ணமேனன் கூறினர்.

இந்தியா தன் நடவடிக்கையால் ஐ. நா. வைப்பலவீனபபடு த்திவிட்டது எனக் கூறுபவர்களை அவர் கண்டித்தார்.

## சென்னை நகரில் போட்டி இடுவதேன்?

—சம்பத்

சென்னை, டிச. 27

தமது சொந்தத்தொகுதியாகிய ஈரோடு தொகுதியை விட்டுவிட்டு, தென் சென்னை தொகுதியில் போட்டிபோடத் தாம் தீர்மானித்தது ஏன் என்பதை தமிழ் தேசிய கட்சித் தலைவர் ஸ்ரீ. ஈ. வி. கே. சம்பத சென்னை நிருபர்களிடம் விளக்கினர்.

"சென்னை நகரம் தி. மு. க. வின் கோட்டை என்று கருதப்படுகிறது. சிங்கத்தை அதன் குகையிலேயே எதிர்க்க விரும்புகிறேன். என்னுடைய புதுக் கட்சியை சென்னை நகரவாசிகள் எந்த அளவு ஆதரிக்கிருர்கள் என்பதை விரைவில் மதிப்பிட விரும்புகிறேன்" என்ருர். தம்முடைய கட்சி 20 அசெம்பிளி ஸ்தானங்களுக்குப் போட்டியிடும் என்றும் அவர் சொன்னர்.

## "துறைமுகத் தொழிலாளர் 100விகிதநன்மைபெற்றனர்"

### 'ஸ்ரீ லங்கா' பத்திரிகையின் கட்டுரை

கொழும்பு, வியாழன்

அரசாங்கத் தகவல் பகுதியிலிருந்து வெளியாகும் "ஸ்ரீ லங்கா" பத்திரிகையில் துறைமுகத் தொழிலாளர்கள் பற்றிய கட்டுரை ஒன்று வெளியாகியிருக்கிறது. 1955-ம் ஆண்டுமுதல் 1959-ம் ஆண்டுவரையுள்ள காலத்தில் துறைமுகத் தொழிலாளர்கள் 100சத விகித நன்மை பெற்றிருக்கிருர்கள் என அதில் கூறப்பட்டுள்ளது.

"மாதம் ஒன்றுக்கு 83மணி மேலதிக வேலை நேரம் ஒருவருக்குக் கிடைக்கிறது. இதன் மூலம் கடந்த மார்ச் மாதம் ஏழரை லட்சம் ரூபாய் மேலதிகச் சம்பளமாக வழங்கப்பட்டது. சென்ற நவம்பர் மாதம் ரூ. 20,000 போனஸாக வழங்கப்பட்டது. துறைமுகத்தில் வைத்திய அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிருர். ரூ. 12 லட்சத்துக்கு மேற்பட்ட தொகைக்கு 2 உணவு விடுதிச் சாலைகளும் கட்டப்பட்டுவருகின்றன. சேமலாபநிதியும், இலவச போசனமும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. உணவின் தரமும் உயர்த்தப்பட்டிருக்கிறது. நோயுற்றவர்களுக்கு விசேஷ விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது." என அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சபாநாயகருக்கு வரவேற்பு

லக்னே, டிச. 28

திரு. அனந்தசயனம் அய்யங்கார் உட்பட லக்னேவில் கூடியுள்ள சபாநாயகர்களுக்கு நகர மேயர் ஒரு வரவேற்பு நடத்தினர்.

**காங்கோ**

## கடாங்கா பிரதிநிதிகள் லியப்போல்ட்வில்லி வந்தன

### பிரதமர் அடௌலா வரவேற்பு

லியப்போல்ட்வில்லி, டிச. 28

காங்கோ பிரதமர் திரு. அடௌலாவுக்கும், கடாங்கா அதிபர் திரு. ஷோம்பேக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி அரசியலமைப்பை வகுப்பதில் பங்குபற்றுமுகமாக கடாங்கா பிரதிநிதிகளின் முதல் கோஷ்டி லியப்போல்ட்வில்லி வந்தது. கடாங்கா செனட் சபையைச் சேர்ந்த 3 பிரதிநிதிகளும் கீழ்ச் சபையைச் சேர்ந்த 3 பிரதிநிதிகளும் ஐ. நா. விமானம் மூலம் காங்கோ தலைநகர் வந்தனர். இதர கடாங்கா பிரதிநிதிகள் சீக்கிரம் லியப்போல்ட்வில்லி வருவார்கள் என அறிவிக்கப்பட்டது. பிரதிநிதிகளின் முதலாவது கோஷ்டியை பிரதமர் அடௌலா வரவேற்று அறிக்கையொன்றை விடுத்தார்.

இதற்கிடையில் வட ரொடீஷியாவிலிருந்து கடாங்காவுக்குள் ஆயுதங்கள் வருவதுபற்றி எலிஸபெத்வில்லியிலுள்ள ஐ. நா. துருப்புக்கள் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

## சீனரின் ஆக்கிரமிப்பு

### மேனன் விளக்கம்

புதுடில்லி, டிச. 27

"இந்தியப் பிரதேசத்தில் சீனர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளை ஏதோ ஒரு வழியிலாவது இந்தியா விடுதலை செய்து கொள்ளும்" என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு வி. கே. கிருஷ்ணமேனன் இன்று காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"பாரதப் பிரதேசத்தின் ஒரு அங்குலத்தையேனும் அந்நியருக்கு விட்டுவிடமாட்டோம். ஆனல் பாரதப் பகுதிகளை மீட்கும் பொறுப்பை அரசாங்கத்திடம் விட்டுவிட வேண்டும். அதன் விபரங்களை வெளியிடுவது உசிதமல்ல" என்று திரு. மேனன் கூறினர்.

புதுடில்லி, டிச. 28

லாவோஸில் நடுநிலைமை அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துமுகமாக 3 இளவரசர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்துபோய்விட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## பிரஸ்னேவ் மகிழ்ச்சி

புதுடில்லி, டிச. 27

"இந்திய மக்களின் மாபெரும் வெற்றியொன்றை கண்ணல் காணும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்று சோவியத் ஜனுதிபதி திரு. பிரஸ்னேவ் இன்று டில்லி நகரசபை, செங்கோட்டையில் அளித்த மாபெரும் வரவேற்புபசாரத்தில் பேசுகையில் கூறினர்.

## ஜனவரி 9–ல் மாக்-அடினேர் சந்திப்பு

போன், டிச. 28

பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லனும், மேற்கு ஜெர்மன் அதிபர் டாக்டர் அடினேரும் ஜனவரி 9-ம் தேதி இங்கு சந்தித்துப் பேசுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

## தந்தி கொண்டு சென்ற பியூன் மரணம்

பதுளை, வியாழன்

பசறை லுணுகலையைச் சேர்ந்த 24 வயதுடைய ஏ. எச். டி. பியதாச என்ற வாலிபர் யப்பாமப்பகுதிக்குத் தந்தி கொண்டுசெல்கையில் எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக்கிக் காலமானர்.

தந்திகொண்டு சைக்கிளில் வேகமாகச் சென்றுகொண்டிருக்கையில் ஒரு 'போக்'கின் மேல் மோதிப் பள்ளத்தில் விழுந்ததால் தலையில் காயமேற்பட்டது. பதுளைப் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்ட அவர் சிகிச்சை செய்யு முன்பே காலமானர்.

இவ்வருட ஜி. சி, ஈ. பரீட்சையில் தேறிவிட்டுச் சும்மா இருக்க விரும்பாததால் மேற்படி தற்காலிக வேலையை அவர் பொறுப்பேற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தால் மரணம் சம்பவித்ததாக மரணவிசாரணை அதிகாரி கூறினர்.

CWE

தரத்தில், பெறுமதியில் தன்னிகரற்ற ரேடியோ -

டெலிபங்கன்

TELE FUN KEN

உலகமடங்கிலுமுள்ள, நல்லனவறிந்தே நாடும் மக்கள் எப்பொழுதும் டெலிபங்கன் ரேடியோக்களையே தெரிவு செய்கிருர்கள். ஏனெனில் அவை அழகான தோற்றமுடையன. நவீன வடிவமைப்பைக் கொண்டன. நேர்த்தியான கிரியாம்சையையும், கூடுதலான நம்பிக்கையையும் தருவன.




ஒவ்வொருவரினதும் விருப்பத்திற்கும் வருவாய்க்கு மேற்ப ஒவ்வொரு வானெலிப் பெட்டி உண்டு.

விநியோகஸ்தர்: ஸி. டப்ளியு. ஈ. ரேடியோப் பகுதி, 85, மெயின் வீதி, புறக்கோட்டை.

ஸி. டப்ளியு. ஈ ஷாப்பு, 21, குமார வீதி, கொழும்பு.

டெலிபங்கன் ஜேர்மன் வானெலிப் பெட்டிகளிலே மிகப் பிரசித்திபெற்ற பெயர்.

நினைவிருக்கட்டும்: ஸி டப்ளியு ஈ பெறுமதி வாய்ந்த சிறந்த பொருட்களையே எப்பொழுதும் வழங்குகிறது.

மணி வாக்கு.

'எல்லா உடைமைகளிலும் ஞானமேஅழியாததாகும்.'

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 13 உ (29-12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## யாழ்ப்பாண மாநகரசபை

யாழ்ப்பாண மாநகரசபையின் 1962-ம் வருட வரவு செலவுத் திட்டப்படி 2 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் துண்டு விழுகின்றது. ஆனல் இதில் புதிய மார்க்கெட் கட்டுவதற்கு, பூர்வாங்கச் செலவுக்கான இரண்டரை லட்சமும் சேர்க்கப்பட்டுள்ளதால் உண்மையில் வரவும் செலவும் சமமாக சரிக்கட்டப்பட்டுள்ளதென்றே மதிக்கலாம்.

சென்ற ஏழு வருட காலமாக வரவைவிட பெருந்தொகை செலவாகியிருக்கையில், நடப்புவருட ஆரம்பத்தில் 6 லட்சம் துண்டு விழுமென்று எதிர்பார்த்திருக்கையில், அடுத்த ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடிந்துள்ளது பெரிய காரியம். நிலுவையாக இருந்த 6 லட்சத்தில் 4 லட்சத்தை வசூலித்திருக்கிருர்கள். நாட்டிலே காலி முதலிய ஸ்தலஸ்தாபனங்களின் பணநிலை மிக மோசமாக இருப்பதுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணம் தனது வரவையும் செலவையும் சரிக்கட்ட முடிந்தது பாராட்டத்தக்கதாகும்.

ஆனல் பல முக்கிய இனங்களின் செலவைப் பெரிதும் குறைத்திருக்கிருர்கள். ரஸ்தாக்கள் சீர்திருத்தத்துக்காக நடப்பு வருடத்தில் ரூபா 75 ஆயிரம் செலவிட்டிருப்பதை அடுத்த ஆண்டில் 30 ஆயிரமாகக் குறைத்துள்ளனர். ரஸ்தா விஸ்தரிப்புச் செலவும் 20 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரத்துக்குக் குறைத்துவிட்டது. சந்துகள் அபிவிருத்திச் செலவும் இப்படியே குறைகப்பட்டிருக்கிறது. போக்குவரத்தும், ஜனத்தொகையும் மிக வேகமாக வளர்ந்துவரும் இச்சமயத்தில், ரஸ்தாக்களை விசாலப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பத்திசிலில் ஏற்கெனவே வலியுறுத்தியிருந்தோம். இந்த இனத்துக்காக அதிக பணம் ஒதுக்க வேண்டியிருக்கையில், நடப்பு வருட மான்யத்தையும் கூட பாதிக்குமேல் குறைந்துவிட்டதைப் பார்க்கையில், இங்கு ரஸ்தாக்களின் நிலை மிகவும் மோசமாகி விபத்துக்கள் அதிகரிக்குமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

ஈழத்தின் இரண்டாவது பெரிய நகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள் அதிகமுண்டு. சாக்கடைகள் திறந்துகிடக்கின்றன. பல இடங்களில் மின்சார வெளிச்சம் சரிவர இல்லை. மூன்று உபநிலையங்களை அமைத்து மின்சார சக்தியைப் பெருக்க அரசாங்கம் 6 லட்ச ரூபாய் கடன் கொடுக்கச் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது. பணநிலை மோசமாக இருப்பதாலேயே அரசாங்கமும் தடையின்றி, கடன் கொடுக்க முன்வந்துள்ளதென்பது உண்மை. ஆனல் அதற்காக முக்கிய செலவினங்களைக் குறைப்பது நகர மக்களுக்குப் பல பல பாதகங்கள் விளைவிப்பதாக முடியும். சிக்கனத்தின் பெயரால், இவ்வித முக்கிய செலவுகளைக் குறைக்க முடியாது.

...கச் செலவுகள் இக் ...நில் பெரிதும் அதிகரித்துள்ளன. ஸ்தலஸ்தாபனங்கள் மக்களின் நன்மைக்காக காரியங்கள் செய்ய வேண்டுமாயின், அதற்கு வருமான இனங்கள் தாராளமாக இருக்க வேண்டும். கலால், மின்சாரம் முதலிய வருமான இனங்களை ஸ்தலஸ்தாபனங்களுக்கே ஒதுக்குவதுடன், மாநகரசபைகளுக்கு சில மூலதனச் செலவுகளுக்காக நேர்முகமாக பொது மக்களிடம் கடன் பெறவும் உரிமை அளிக்க வேண்டும். மாநகரசபையில் கோஷ்டிப் போட்டிகள், நகர அபிவிருத்திக்குத் தடையாகவுள்ளதால், இப்போட்டிகள் மறைந்து, மெம்பர்கள் ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள். புதுவருடத்தில் மெம்பர்கள் ஒத்துழைத்து அரசாங்கம் உள்ளிட்டு பலரது நன்மதிப்பையும் பெற்று, பொதுமக்களுக்கு மேலான தொண்டு செய்வரென்று நம்புகிறோம்.

# கதிரியக்க வீச்சினல் ஏற்படும் ஆபத்து

### உணவையும் தண்ணீரையும் பாதுகாக்கவேண்டியதன் அவசியம்

அணுக்குண்டுகள் சோதனைகளின் விளைவாக கதிரியக்க வீச்சுகள் எங்கும் பரவி, உண்ணும் உணவுப் பொருள்கள் குடிக்கும் தண்ணீர் இவைகளைக் கெடுத்துவிடுகின்றன. இந்த ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கான சகல முன்னேற்பாடுகளை மேற்கு ஜெர்மனி செய்துள்ளது.

"வெகு சீக்கிரமே பல விஷயங்கள் தெளிவாக்கப்பட வேண்டும். பல பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும். இல்லையேல் பல ஆபத்துகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்" என்று ஸ்கால்ஸ் விக்ஹோல்ஸ்டீன் நகரிலுள்ள கதிரியக்க வீச்சு ஆராய்ச்சி நிலையத் தலைவர் பேராசிரியர் நுமெயர், ரஷ்யாவின் சமீப அணுக்குண்டு சோதனைகளைப் பற்றி பிரஸ்தாபிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இப்போது முதற்கொண்டே கதிரியக்க வீச்சுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை முன்னதாக எதிர்பார்த்தே அவைகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

உணவுப் பொருள்களும் குடிக்கும் தண்ணீரும் கதிரியக்க வீச்சினல் கெடாமல் பாதுகாக்கும் வேலையே பெரிய வேலையாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர். கீல் நகரில் பால்பண்ணைத் தொழில் ஸ்தாபனத்தில் கதிரியக்க வீச்சைக் கண்டுபிடிக்கும் விசேஷக்கருவி அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியக் கழகங்கள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் இவைகள் கதிரியக்க வீச்சுகளைக் கண்டறிய ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றன காற்றில் கதிரியக்க வீச்சு எவ்வளவு கலந்திருக்கிறது என்பதைக்கூட கண்டுபிடித்துவிடமுடியுமாம். மேற்கு ஜெர்மனியின் வடக்குப் பாகத்தில் குடிதண்ணீர் கதிரியக்க வீச்சு காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. காற்றில் கலந்துள்ள கதிரியக்க வீச்சினல் பூமிக்குள்ளிருந்து எழும் தண்ணீர் அதிகமாக பாதிக்கப்படமாட்டாது. ஆனல் ஸ்கால்ஸ் விக் ஹோல்ஸ்டினில் அண்டாக்களில் நிரப்பப்படும் மழைநீரையே குடிப்பதற்கு உபயோகிக்கிருர்கள். சுமார் 30,000 மக்கள் இந்த நீரை உட்கொள்கின்றனர். மழைநீரில் கதிரியக்க வீசசு பன்மடங்கு அதிகமாக கலந்துள்ளது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஹாலிஜென் தீவுகளிலுள்ளவர்கள் மழைநீரைத்தான் குடிக்க உபயோகிக்க வேண்டியுள்ளது. தண்ணீர்க்குழாய்கள் அமைக்க ஏராளமாக செலவாகுமென்பதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தீவிலுள்ளவர்களுக்கு ஆபத்து இல்லாத குடிநீரை விநியோகம் செய்ய வேண்டி விசேஷ கதிரியக்கத் தடுப்பு வடிமுனைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. சுமார் 550 வடிமுனை சாதனங்கள் அமைக்கப்படவேண்டியிருக்கும். முன் பாதுகாப்பு ஏற்பாடுகள் இதர நடவடிக்கைகள் இவைகளுக்கெல்லாம் ஏராளமான தொகை செலவாகும்.

ரஷ்யாவின அணுக்குண்டு சோதனைகளின் விளைவாக உலகிலுள்ள ஒவ்வொரு நடுகளும் கதிரியக்க வீச்சுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஏராளமான தொகையைச் செலவிடவேண்டியிருக்கிறது.

## தீண்டாமை ஒழிப்பு

பருத்தித்துறை, வியாழன்

வடமராட்சிப்பகுதியில் தீண்டாமை ஒழிப்புப் பற்றிய நடவடிக்கைகளை எடுக்க பருத்தித்துறை, உடுப்பிட்டிப் பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட சபையொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இச்சபையில் ஸ்தலஸ்தாபனங்களின் தலைவர்களும், பருத்தித்துறை, கரவெட்டி வர்த்தக ஸ்தாபன உத்தியோகத்தர்களும் இடம் பெறுவர் எனத் தெரியவருகிறது.

# நாவலர் வரிசையில் வந்த 'மகாவித்துவான்' கணேசையர்

## முத்தமிழ் விழாவில் அறிஞர்கள் பாராட்டு

மாவிட்டபுரம், வியாழன்

"தமிழுக்கும் சைவத்திற்கும் இன்னல் தோன்றிய போது ஆறுமுகநாவலர் அவதரித்தார். அப்படியே காலத்துக்குக் காலம் எங்கள் இன்னல்களைத் துடைக்க பெரியார்கள் தோன்றினுர்கள். அந்தப் பெரியார்கள் வரிசையில் வந்தவர்தான் மகாவித்துவான் கணேச ஐயர் அவர்களாகும். அன்னருக்கு அஞ்சலி செய்வது நம் கடமை."

இவ்வாறு முன்னைநாள் உதவிவித்தியாதிபதி திரு. கே. எஸ். அருள்நந்தி வீமன்காமம் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் கணேசையர் தமிழ்ச்சங்க ஆதரவில் நடைபெற்ற முத்தமிழ்விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழ் ஏட்டுச் சுவடிகளுடன் கணேசஐயாவின் நூல்களைத் தாங்கிய ஊல்வலம் நாதசுர இசையுடன் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மேற்குக் கோபுரத்தில் இருந்து பக்தி சிரத்தையுடன் விழாமண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. சுவடிகளை மக்கள் பூரண கும்பம் வைத்து மரியாதை செலுத்தினர்,

திரு. அருள்நந்தி தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: "கணேசஐயர் அவர்கள் கற்றதுடன் நிற்கவில்லை. தான் கற்றதை வாழ்க்கை முறையில் காட்டினுர். இப்படியான பெரியோர்களுக்கு விழா எடுப்பதினுல் இவ்விழாக்கள் எம்மன நிலையை மேம்படுத்த உதவும்."

அடுத்ததாக ஆத்மஜோதி ஆசிரியர் அன்புமணி நா. முத்தையா 'சமயமும் வாழ்க்கையும்' என்னும் பொருள்பற்றி பேசுகையில் கூறியதாவது:

"சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமயம் என்ருல் வாழ்க்கை. வாழ்க்கை என்ருல் சமயம். சமயத்திற்கும் வாழ்க்கைக்கும் என்று பிரிவினை ஏற்பட்டதோ அன்றுதான் உலகத்தில் வேற்றுமை ஏற்பட்டது. சமயம் என்பது அனுபவத்தில் உணர வேண்டிய ஒன்று. தன்னை உணர்தலே சமயமாகும். சமயச் சின்னங்களை அணிவதால் மாத்திரம் சமயத்தை உணர்ந்தவராகிவிட முடியாது. அல்லது சமயசங்கத்தில் சேர்ந்துவிட்டால் சமயத்தை உடையவனுகிவிட முடியாது. மனிதன் உருவத்தினுல் மனிதனுகிவிட முடியாது. உள்ளத்தினுல் மனிதனுக வாழ வேண்டும்."

இதனைத் தொடர்ந்து பட்டிமன்றத்தை இந்துசாதனம் ஆசிரியர் திரு. என். சிவப்பிரகாசம் தொடக்கி வைத்துப் பேசுகையில் "மகாவித்துவான் கணேசஜயர் ஈழநாட்டின் தவப் புதல்வர்களில் ஒருவர் ஆகையால் அவரின் நாமத்துடன் இப்பட்டிமன்றம் இணைந்திருப்பது சாலச் சிறந்தது. அப்பெரியார் வாழ்க்கை இணைபிரியாது சைவமும் தமிழும் சேர்ந்து இயங்கிய சால்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது" என்ருர்.

'ஈழத்தில் நாடகம்' என்னும் பொருள்பற்றிக் கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில் "ஆதிகாலத்திலிருந்து எல்லாச் சமயத்தாரும் எல்லாவித மனிதரும் நாடகத்தை நடத்திக் கொண்டு வந்துள்ளார்கள். நாடகம் ஆரம்பத்தில் சமய அறிவை விருத்தி செய்வதற்காகவே ஏற்பட்டது. நாடகம் ஒரு கலையாக மாறிவிட்டது. 60, 70 வருடங்களுக்கு முன்பு கிராமங்களில் நடைபெற்ற நாடகங்கள் நாட்டுக்கூத்து என்ற பெயரால் அழைக்கப்பட்டது. —'தேசிய நாடகம்' என்று அழைப்பது சாலப் பொருத்தம்.

கலைஞர்கள் எவருக்கும் பயந்தவர்களல்ல. கலையை எவருக்கும் அடிமையாக்க முடியாது. தமிழ்ப் பாஷையில் கலைஞர்கள் விருத்தியடைந்ததுபோல் எப்பாஷையிலும் விருத்தியடையவில்லை. எமது கலையை எவராலும் அழிக்க முடியாது. தமிழ்னின் சமையல் கலையே தனிப் பெருமைவாய்ந்தது. சினிமாவின் வருகையினுல் நாடகத்தின் மதிப்புக் குறைந்துவிட்டது. மறுபடியும் நாடகத்தில் விழிப்புநிலை ஏற்பட்டு வருகிறது. சமூக நாடகம் இன்றைய சூழ்நிலையில் தேவையானது.

பேருக்காக நாடகம் நடத்தக்கூடாது. கலை வளர வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்ய வேண்டும். திரு. எஸ். ...பரம் தில்லைராசா "ஈழத்தின் கர்நாடகஇசை" என்பதுபற்றியும், திரு. எஸ். சத்தியலிங்கம் "ஈழத்தின் பரதநாட்டியம்" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினுர்கள்.

திரு. எஸ். கந்தராஜசர்மா நன்றி கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பு குதிரைப்பந்தயத் திடல் பக்கமாகக் காரில் வந்தேன். அடே அப்பா, எவ்வளவு நீண்ட 'க்யூ'! பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் பல மணி நேரமாக கியூவரிசையில், வேலைக்காகக் காத்துக் கிடக்கிருர்கள். வரவர வரிசை நீண்டுகொண்டே போயிற்று. ஊரில் வாலிபர்களிடையிலே வேலையில்லாக் கஷ்டம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதென்பதை இது காட்டுவதாக இருந்தது.

* * *

பீடி, சிகெரெட், ஐஸ்பழம், கடலை முதலியவற்றுக்கு நல்ல வியாபாரம் வாலிபர்கள் சாரம், சட்டை அணிந்து, "பயனீர்" படையில் சேரத் தவங்கிடந்தார்கள். 'பயனீர் படை' ஏதோ பெரிய சண்டையில் போராடுவதற்காக அல்ல. கொழும்பு துறைமுகம் முதலிய இடங்களில் மூடைகள் தூக்கவும், வேறு எந்த வேலைகள் செய்யவும் தான்.

ஓரிடத்தில் 'க்யூ'வில் இருந்த இருவரிடையே ஏதோ சச்சரவேற்பட்டு, கத்திக்குத்திலும் முடிந்ததாக ஓர் அன்பர் சொன்னுர்.

வேலைசெய்யத் தயாராக இருந்தும் வேலை இல்லாமல் இவ்வளவு பேர்சும்மா சோம்பி இருக்கிருர்கள்! நாட்டுக்கு எவ்வளவு நஷ்டம்!

ரஷ்யாவென்ருல், எல்லாருக்கும் வேலையுண்டு. வேலையில்லாக் கஷ்டமென்பது அங்கில்லை பிரிட்டன் முதலிய நாடுகளில் வேலையில்லாதவர்களுக்கு உதவிப்பணம் கொடுக்கிருர்கள். ஆனல் இலங்கை, இந்தியா முதலிய நாடுகளிலே, வேலையில்லாமல் பட்டினி கிடந்து யார் செத்தாலும்சரி, கேள்விமுறை கிடையாது!

இதனல் இங் வாலிபர்களிடையே மனக்கசப்பும் அதிருப்தியும் அதிகரிப்பதாகவுள்ளது.

இப்போது வேலைக்காகக் கியூவரிசையில் நிற்கும் பல்லாயிரக்கணக்கானவர்களில் ஒரு பகுதியினருக்குத்தான் வேலை கிடைக்கும். அதுவும் டெம்பரரி! வேலைமுடிந்தால், மீண்டும் வேலையில்லாப்பட்டாளம் தான்! மற்றவர்களின் நிலைமையைவிளக்கத்தேவையில்லை. இவர்கள் விஷயத்தில் அரசாங்கத்துக்குப் பொறுப்பில்லையா?

* * *

எங்கும் வேலை நிறுத்தம் என்பதே பேச்சு. தோட்டத்தொழிலாளர்கள்கூட இதில் சேர்ந்து அடையாள வேலைநிறுத்தம் செய்யப்போவதாகக் கேள்விப்பட்டேன். பொது வேலை நிறுத்தம் நடந்தாலும் கூட நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் தயார் செய்துவருவதாயும், அதற்காகவே, பயனியர் படையைத் திரட்டி வருவதாயும் தெரிகிறது. இதெல்லாம் எப்படி எங்கே முடியப் போகிறது!

பிப்ரவரி 4 நெருங்க நெருங்க இலங்கையிலும் நிலைமை மோசமாகுமென்பதற்கு இதெல்லாம் அறிகுறி என்கிருர் சோதிடநணபர்.

* * *

அளவெட்டியிலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தில், குறிப்பிட்டிருப்பதாவது: சுடச்சுட அரசியல்புதினங்களையெல்லாம் விமர்சனம் செய்யும் நீங்கள் ஆளும் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருப்பதைப் பற்றிக் கேள்விப்படவில்லையா? ஓர் உதவி மந்திரி தலைமையில்

(8-ம் பக்கம் பார்க்க)

# இராமபிரான் வனவாசத்தை அறிந்தவர்கள் இடமாற்றம் என்றதும் திகைப்பதா?

## ஆசிரியத் தொழிலை கடவுள் தொண்டாக கருதவேண்டும்

### தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில் உதவி வித்தியாபதி உரை

யாழ்ப்பாணம், வியாழன்

**"ஆசிரியத்தொழில் தூய்மையானது. இப்புனித வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர்கள் எக்காரணத்தைக்கொண்டும் துவேஷ மனப்பான்மை கொள்ளக்கூடாது. ஆசிரிடர் கைக்கொள்ளவேண்டியஇலட்சியம் கடமையுணர்ச்சியில் நம்பிக்கை வைப்பதாகும். ஆசிரியத் தொழிலைக் கடவுட் தொண்டாகக்கணித்து நற்பணிபுரியவேண்டும்."**

இவ்வாறு வட இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் 38-வது வருடாந்தக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் குறிப்பிட்டார். கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு இச்சங்கத்தலைவர் வித்துவான் சி. இ. கந்தசாமி தலைமைவகித்தார்.

திரு. சோமசேகரம் தொடர்ந்து பேசியதாவது:-

என் மனதில் ஒரு போராட்டம் நீண்டநாட்களாக நடந்துகொண்டிருக்கிறது. இப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதா இல்லையா என்பதே அப்போராட்டமாகும். கடந்த 8 வருடங்களுக்குமுன் ஓய்வு பெறுவதற்காக எனது பத்திரங்களைச் சமர்ப்பித்தேன். ஆனால் வைத்திய சபையின் சம்மதம் கிடைக்காமையால் தொடர்ந்தும் சேவையிலிருக்குமாறு மேலதிகாரிகள் தெரிவித்துவிட்டனர். சில ஆண்டுகளுக்குமுன் சுவாமி சுத்தானந்தர் இங்கு விஜயஞ்செய்தபோது தமிழுக்கும் சைவத்துக்கும் தொடர்ந்தும் தொண்டாற்ற வேண்டுமென்று வற்புறுத்தியிருந்தார்.

**இலங்கையின் இன்றைய போக்கு**

மனிதனிடம் விசேஷகுணம் இருக்கவேண்டும். எக்காரியத்தையும் செயல்படுத்த முனையுமுன் தன் சிந்தனையைச் செலுத்தி நன்குக ஆலோசிக்க வேண்டும். இப்படியான ஆராய்ச்சியால் ஐம்பதுவருடங்களுக்குப்பின் நிகழப்போவதையும் தெரிந்து கொள்ளலாம். எனவே, இலங்கையின் இன்றைய போக்கைப்பற்றிக்குறை கூறுவது தவறானதாகும். இயற்கையின் தூண்டுதலினால் ஆறு எப்படிஓடுகிறதோ அதேபோல எல்லாக் கருமங்களும் நியதிக்கமைய நடைபெறுகின்றன. சரித்திர ரீதியாகவோ அல்லது மனத்தத்துவ ரீதியிலோ பிரச்சினைகளைக் கவனிப்பவர்கள் எவரும் இலங்கையின் இன்றைய போக்கைப் பற்றி குறைகூறமுடியாது.

ஆசிரியர்களுக்கு ஒரு விசேஷ குணமிருக்கவேண்டும். மற்றவர்களின் மேல் குறைகூறுவதை விடுத்து அன்புமார்க்கத்தில் எதிரிகளையும் நேசித்து நடக்கவேண்டும்.

**கல்வி விருத்தி**

சராசரி வீழ்ச்சியால் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் என்ற கூக்குரல் இன்று அதிகமாக எழுகின்றது. சராசரியைக் கூட்டிக்கொள்ளும் விஷயத்தில் ஆசிரியர் கவனம் செலுத்தவேண்டும். வேலைகிடைக்குமென்பதற்காகவோ அன்றி இடமாற்றம் ஏற்படாது என்பதற்காகவோ சராசரியைக் கூட்ட நினைக்காதீர்கள். கல்வியை மாணவர்களுக்கிடையே விருத்திசெய்ய வேண்டுமென்ற பொதுநன்மையைக் கருதி சராசரியைக் கூட்டிக்கொள்ள முயற்சியுங்கள்.

பொருளாதாரத்தைவிருத்தி செய்வதில், வளர்ப்பதில் விஞ்ஞானம், கலை ஆகிய பாடபோதனைகளில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இராமபிரானுக்கு பதினான்கு ஆண்டுகள் வனவாசம் கிடைத்தது. இலட்சியபுருஷன் இராமபிரான் தன் அருமைத்தம்பி இலட்சுமணனுடனும் அழகிய அருமை மனைவி சீதாபிராட்டியாருடனும் அதனை ஓர் இலட்சியமாகக்கொண்டு வனவாசத்துக்குச் சென்றான். இவற்றையெல்லாம் இலக்கியத்தில் படித்துத்திளைத்த ஆசிரியர்கள் இடமாற்றமென்றதும் திகைக்கின்றார்கள். இந்த மனப்பான்மையை உடனடியாக அவர்கள் கைவிடவேண்டும். இலங்கையின் எந்தப்பகுதிக்கும் சென்று சேவைசெய்ய தயாராக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**எதிர்காலத்தில் பாலர் வகுப்பு**

இன்னும் பத்தாண்டுகளில் பாலர்வகுப்புத்தான் முக்கிய வகுப்பாக பாடசாலைகளில் அமையப்போகிறது. பாடசாலையின் தரம் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்காமல் நன்நிலைப்படுத்தி சிறந்த அத்திவாரம் போடப்படவே இம்முறை வரவிருக்கிறது.

தலைமை வகித்த வித்துவான் கந்தசாமி தமது தலைமையுரையில் சகலரையும் வரவேற்றுப் பேசுகையில் நெருக்கடியான கட்டத்தில் ஆசிரியரின் நன்மைக்காக பாடுபட்டுழைத்தவர் உதவி வித்தியாதிபதி எனப் பாராட்டினார்.

காரியதரிசி திரு. எஸ். பொன்னுத்துரை நன்றி கூறினார். நண்பகல் விருந்துபசாரமொன்றும் நடைபெற்றது.

## ஆசிரியமணிகளுக்கு பாராட்டு

ஆசிரியமணி வே. சுப்பையாவுக்கும் புத்தளத்தைச் சேர்ந்த ஆசிரியமணி வண. சகோதரர் செபஸ்தியான் பீரிஸுக்கும் வடஅலங்கைத் தமிழாசிரியர் சங்கம் உபசரணையொன்று அளித்துபாராட்டுத்தெரிவித்து கௌரவித்தது.

சென்ற புதன்கிழமை நடைபெற்ற இச்சங்கத்தின் 38வது வருடாந்தக்கூட்டத்தில் இந்த உபசரணையும் நடைபெற்றது இவர்களுக்கு வரவேற்பு பாராட்டுப் பத்திரங்களும் வாசித்தளிக்கப்பட்டன.

இவர்களது சேவையைப் பாராட்டிப் பலரும் பேசினர். கடந்த 1958-ம் ஆண்டுகலவரத்தின் போது ஆசிரியமணி வண பீரிஸ் தமிழர்களுக்குச் செய்த சேவையைப் பலரும் பாராட்டினர்.

## யாழ்ப்பாணத்தில் பயனியர் படைத் தொண்டர்கள்

### ஜனவரி 2-ந் திகதி திரட்டப்படுவர்

கொழும்பு, வியாழன்

யாழ்ப்பாணத்திலும், திருக்கோணமலையிலும் வருகிற ஜனவரி 2-ம் தேதி இலங்கை ராணுவ பயனியர் படைக்குத் தொண்டர்கள் திரட்டப்படுவார்கள்.

நாளை பண்டாரவளை, இரத்தினபுரி, குருநாக்கல், அனுராதபுரம் ஆகிய இடங்களில் தொண்டர்கள் திரட்டப்படுவார்கள். மேற்கண்ட ஊர்களிலுள்ள பொலிஸ் நிலையங்களில் இத்தொண்டர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.

நேற்று கொழும்பு, கண்டி, காலி ஆகிய மூன்று நகரங்களிலும் இலங்கை ராணுவ பயனியர் படைக்குத் தொண்டர்கள் திரட்டப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் இந்நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டனர்.

## சமநிலையெய்திய...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையானவை. இதன்மூலம் ரூபா 130,624/- கணக்கிடப்பட்ட அதிகப்படி வருமானமாக கிடைக்கப்பெறும். இருந்தும் அரசாங்க வட்டாரங்கள் வற்புறுத்தியதன் காரணமாக வரி இறுப்பாளர்களுக்கு இன்னல் விளைவிக்கா வண்ணம் 12 1/2% விகிதங்களை நிலை நாட்டுவது சாத்தியமாகிறது.

உங்கள் ஒத்துழைப்பாலேயே தான் சகல விஷயங்களிலும், சகல விவகாரங்களிலும் ஏற்பட்ட இக்கட்டான நிலையை என்னால் சமாளிக்க முடிந்தது. இவைகளுடன் மாநகரசபை ஊழியர்கள் அளித்த உண்மையான சேவையும் பாராட்டத்தக்கது.

## சுயசிந்தனை நன்மைபயக்கும்

வவனியா, வியாழன்

"சுயசிந்தனைஎன்றும் நன்மை பயக்கும். அதேபோல் சுய தயாரிப்பு என்றும் நற்பலனைக் கொடுக்கும். ஒவ்வொருவரும் சுய தயாரிப்பில் ஈடுபடல் வேண்டும். இயந்திர சகாப்தத்துக்கு முன்னர் கைத்தொழில்களில் ஈடுபட்டே தமது வாழ்க்கையை நடாத்தினர் இந்நிலை மீண்டும் ஏற்படல் வேண்டும்."

இவ்வாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் இறைம்பக்குளம் திருக்குடும்பக் கன்னியாஸ்திரி மடப் பாடசாலையில் சுதேசப் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## ரஷ்ய ஜனதிபதி

புதுடில்லி, டிச. 28

ரஷ்ய ஜனதிபதி திரு. பிரஸ்னேவ் பிரதமர் நேருவுடன் தமது இறுதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். நாளை அவர் மாஸ்கோ திரும்புவார்.

## ஆசிரியர் சேவை பற்றிய நிபந்தனைகளை தெளிவு படுத்தவேண்டும்

### அ. இ. ஆசிரியர் சங்கத்தலைவர் அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

"தங்கள் பாடசாலைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் போது அரசாங்கத்தின் கீழ் கடமையாற்ற இஷ்டப்படாத ஆசிரியர்களை ஓய்வுபெற அனுமதிக்கும்படியான முடிவை ஆசிரியர்கள் வரவேற்கின்றனர்" என பாடசாலை ஆசிரியர்கள் பென்ஷன் சட்டத் திருத்தம் பற்றி அகில இலங்கை ஆசிரியர் சங்க யூனியன் தலைவர் திரு. என். சபாரத்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

"புதிய அமைப்பின் கீழ் பல விஷயங்களில் தங்கள் உரிமை என்ன என்பது ஆசிரியர்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. உதவி பெற்ற பாடசாலை ஆசிரியர்கள் என்ற முறையில் இதுவரை அவர்கள் சிவில், அரசியல் உரிமைகளை அனுபவித்து வந்தனர். இதனால் அவர்கள் இடமாற்றம் செய்யப்படவில்லை. உதவி பெறும் பாடசாலைகளில் அவர்களது சேவைக் காலம் பதவி உயர்வு விஷயத்தில் கணிக்கப்படுமா என்பதும் கேள்வியாகும்."

இக் கேள்விகளுக்கு மந்திரியிடமிருந்து சாதகமானவிடை கிடைக்குமானால் ஆசிரியர்கள் குறை சொல்வதற்கு இடமிருக்காது. இப் பிரச்சினைகள் தெளிவாக்கப்படும்வரை தங்கள் முடிவை அறிவிக்குமாறு ஆசிரியர்களைக் கோருவது நியாயமல்ல. டிசம்பர் 15-ம் தேதி வெளியான கெஸட் அறிக்கையில் ஆசிரியர்கள் இது பற்றி முடிவு செய்வதற்குப் போதுமான காலம் கொடுக்கப்படவில்லை.

## அரசியலுரிமை

### ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

வட இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் 38 வது ஆண்டு அறிக்கையை காரியதரிசி திரு. எஸ். பொன்னுத்துரை வருடாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மிக நீண்டகாலமாகப் பல்வேறு மத ஸ்தாபனங்களினதும் பெருமனம்படைத்த மதாபிமானிகளதும் முயற்சிகளால் ஸ்தாபிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டு வந்த உதவிநன்கொடை பெறும் பாடசாலைகளை வித்தியாதிபதியின் முகாமையின் கீழ்க் கொண்டுவருவதெனக் கடந்த ஆண்டில் அரசாங்கம் தீர்மானித்தது ஜனநாயக அடிப்படையில் இயங்குவதாக உள்ள அரசாங்கம் சிம்மாசனப் பிரசங்கத்திற் குறிப்பிட்ட தனது கொள்கையை நிலைநாட்டும் பொருட்டு 1-12-60 தொடக்கம் சகல பாடசாலைகளையும் கல்வித் திணைக்கள அதிபரின் முகாமையின் கீழ்க் கொண்டுவந்தது. அரசின் வழிச் செல்லவேண்டிய சூழ்நிலையிலுள்ள நமது உறுப்பினர் அனைவரும் அதனை ஏற்றுப் பணிபுரிய முன்வந்தனர். இவ்விஷயத்தில் நாம் பெருமைப்படுகின்றோம். நாம் பெருமைப்படும் அளவிற்கு அரசாங்கம் எம்மை வழிநடத்திச் செல்லும் என்பதில் நம்பிக்கையுடையேம்.

கல்வித் திணைக்கள அதிபரின் முகாமையின்கீழ் சேவை செய்வதில் ஆசிரியர் எவரேனும் விரும்பாத இடத்து அவர்கள் [illegible] இப்பொறுப்[illegible] அரசாங்கம் உதவிசெய்யுமென எதிர்பார்க்கிறோம்.

**அரசியலுரிமை**

உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்கள் மிக நீண்டகாலமாக அனுபவித்து வந்த அரசியல் சுதந்திரம் இப்போதுள்ள நிர்வாக மாற்றத்தால் பறிக்கப்படக் கூடுமென்பது குறித்து மனம் வருந்துகின்றோம். இது சம்பந்தமாக வடமாகாண ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் லங்கா ஜாதிக குரு சங்கம, ஸ்ரீ லங்கா ராஜ்ய குரு சங்கம என்னும் இரு சிங்கள ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் இச்சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்த ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அரசியலுரிமை முன்னர் இருந்தது போலவே எங்களுக்கு இருக்க வேண்டும் என்பதற்கு மாறான எண்ணம் எச் சங்கத்திடமும் இல்லாமை ஈண்டு விசேடமாகக் குறிப்பிடவேண்டியதொன்றாகும். உதவி நன்கொடைபெறும் பாடசாலை ஆசிரிசர்களின் வரையறையான, சிறந்த முயற்சிகளால் இவ்விலட்சியம் கைகூடலாமென நம்புகின்றோம்.

## டைனமட் வைத்து மீன்பிடித்ததாக வழக்கு

மன்னர், வியாழன்

ஆர். மாணிக்கம் ரோச், டி. சூசைகுட்டி ஆகிய இருவரும் டைனமட் வைத்து மீன் பிடித்ததாய் மன்னார் மீன்பிடி இன்ஸ்பெக்டர் திரு. சிவராஜபிள்ளை தொடர்ந்த வழக்கில் மன்னார் மாஜிஸ்ரேட் திரு. டி. ஜே. ராஜரத்னம், ரோச்சுக்கு 6 மாதக் கடுங்காவல்தண்டனையும் சூசைக்குட்டிக்கு ரூ 500 அபராதம் அல்லது 4 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித்தார்.

## கிராமசபைத் தீர்மானம்

உடுப்பிட்டி, புதன்

கட்டைவேலிக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டமொன்று இன்று காலை கூடிய போது 2ம் வட்டார அங்கத்தவர் திரு. வி. மகாலிங்கம் பிரேரித்த கீழ்க்காணும் இரு பிரேரணைகளும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:-

"மலகூடத் தொழிலாளருக்கு பென்ஷன் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு வீட்டு வசதிகளும், மழைக் கோட் உடைகள் முதலியனவும் ஆண்டுக்கொருதடவை கொடுக்கப்படவேண்டுமென்று, கௌரவ சுகாதார அமைச்சரை இச்சபை வேண்டுகிறது.

"இக் கிராமசபைக்குட்பட்ட பகுதிகளில் தேநீர்க்கடைகள், போசனசாலைகள் ஆகியவற்றின் சொந்தக்காரர், கடைச்சிப்பந்திகளின் வசதியை உத்தேசித்து மலசலகூடங்கள் கட்டவேண்டுமென்றும், அவ்வாறு கட்டாத சொந்தக்காரர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க சுகாதாரப் பரிசோதகருக்கு இச்சபை அங்கீகாரம் அளிக்கிறதென்றும் தீர்மானிக்கிறது".

சபைத் தலைவர் திரு. இ. சச்சிதானந்தம் தலைமைவகித்தார்.

# உங்கள் இராசிபலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு மார்கழி மாதம் 15-ந் திகதி முதல் 21-ந் திகதி வரை (டிசம்பர் 30 முதல் 1962 ஜனவரி 5வரை) உள்ள பலன்கள்

## மேட இராசி

(அசுவதி, பரணி, கார்த்திகை முதற்பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரததில் புகழ், பிரபல நிலையான செல்வாக்கு அபிவிருத்தி, அறிவுத்திறன் பிரகாசித்தல், சரீராரோக்கியம், வருமான உயர்வு, பெண்களுக்குத் தம் கணவர் மூலம் பொருள்வரவு, தெய்வ வழிபாட்டில் மனம் லயித்தல், புதியனவற்றில் ஊக்கமும் அதனால் பணவரவும் பெரும்பாலும் இருக்கும். பொதுவாக இவ்வாரம் நற்பலன் அதிகமாக இருக்கும். உத்தியோகத் திலிருப்பவர்கள் சிறிது கவனமாக நடத்தல் வேண்டும். பதவியுயர்ச்சியும் அதனால் இடமாற்றமும் கூட வரும். வர்த்தகத்துறையிலுள்ளவர்களுக்கு சிறப்பாக புத்தகங்கள் பதிப்பாளருக்கு நற்பலன் கிடைக்கும். பொதுவாக வியாபாரிகளுக்கு இவ்வாரம் நன்று. கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அபிவிருத்தி இருக்கும். இனசன விரோதம் தோன்றும். பெண்களுக்கு தம கணவர் மூலமாக வருவாயும் காதல் விவகாரங்களில் வெற்றியும் காணப்படுகின்றது. இவ்விராசியாளருக்கு ஞாயிற்றுக்கிழமை (16-ந் தேதி) சனிபகவான் தனுவிலிருந்து மகரத்திற்கு மாறுவதால் அதன்பின் தொழில், பணம், குடும்பம் முதலியவற்றில் சிறப்பான அபிவிருத்தியும் அதிகலாபமும் பூமி, வீடு, இரும்பு யந்திரங்கள் சம்பந்தமாக இலாபமுடைய அனுகூலங்களும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 15, 16, 17, 18 சுபதினங்களாகவும் 19 முதல் 21 வரை அசுப தினங்களாகவும் இருக்கும்.

★

## இடபஇராசி

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம், முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவவாரத்தில் சுகக்குறைவும் பணமுடையும் வரவுக்குமேல் செலவும் துக்கசெய்திகள் கேட்டலும் பிரயாணங்கள் செய்தலும் உடல் நலத்தில் வயிற்றுக் கோளாறும் இருக்கும். சிலருக்கு கண்வருத்தமும், பல்வருத்தமும் உறவினர் பகை ஏற்படலும் காணப்படுகின்றது. பழைய சொத்துக்கள் கைக்கு வந்து சேர்வதும் உத்தியோகத்துறையினருக்கு பதவிஉயர்வும் பதவிமாற்றமும் புகழ்பரவுதலும் காணப்படுகின்றன. கமத்தொழிலிலீடுபட்டுள்ளவர்களுக்கு மனக்கவலைகள் நீங்கும். தொழிலில் அபிவிருத்தியேற்படும். கொடுக்கல் வாங்கல் சிறக்கும். பெண்களுக்கு காதல் வெற்றி, பொருள் சேர்க்கை, வீடு, பூமிவிருத்தி, தர்மவழியில் பணச்செலவு, ஆகியன காணப்படுகின்றன. மாணவருக்கு விடாமுயற்சியும் வெற்றியும் காணப்படுகின்றன. பிதாவழி உதவியும் உண்டு. இவ்விராசியாளருக்கு வரும் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சனிபகவான் மாற்றமடைவதால் மனோதைரியமும்முயற்சிகளில் வெற்றியும், தெய்வவழிபாடும் தானதருமச் செய்கைகளும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 16, 17, 18, 19 சுபநாட்களாகவும், 15, 20, 21 அசுபநாட்களாகவும் காணப்படுகின்றன.

★

## மிதுன இராசி

(மிருகசீரிடம், பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் சுகக்குறைவு, பணக்கஷ்டம், வயிற்றிலும், கண்ணிலும் வருத்தங்கள் தோன்றுதல், செய்தொழிலில் அதிருப்தி, கோபத்தால் கருமங்கள் கெடுதல், வாரஇறுதியில் முயற்சிகளில் வெற்றியும் மனமகிழ்ச்சியும் காணப்படுகின்றன. உறவினரிடையே விரோதங்கள் ஏற்படலாம். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக நடக்கவும். உத்தியோகத்திலிருப்பவருக்கு நிதானம் அவசியம். மனத்தளர்ச்சியிருக்கும். அதனை நீக்கி உறுதியுடனும் உண்மையுடனும் நடக்கவும். கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளவருக்கு அபிவிருத்தியுண்டு. பெண்களுக்கு தேகாரோக்கியம் குன்றும். கவலைகள் வளரும். மனஸ்தாபங்கள் ஏற்படும். மற்றோருடன் வார்த்தைகளை அளந்து பேசுக. தொழில் புரிபவருக்கு இடமாற்றம் ஏற்படலாம் அல்லது தொழில் மாற்றம் ஏற்படும். மாணவராக இருப்போருக்கு கஷ்டங்கள் ஏற்பட்டு அதனல் கல்வியில் மனம் செலுத்த முடியாது போகும். வர்த்தகத் துறையினருக்கு தொழில் மந்த நிலைமை ஏற்படும். புதியன முயற்சிக்க வேண்டாம். இவ்விராசியாளருக்கு 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சனிபகவான் மாற்றத்தினல் முக்கியமாக பந்துணர்களுடன் சற்று கவனமாக நடந்து கொள்வது அவசியமாகின்றது. வீண் மனக்கோட்டைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இவ்விராசியாளருக்கு 19, 20, 21-ந் திகதிகள் சுபதினங்களாகவும் 15, 16, 17, 18 அசுபதினங்களாகவும் காணப்படுகின்றன.

★

## கடக இராசி

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் விரோதிகள் பணிவும், செய்தொழில் வெற்றியும் சிக்கலாகவுள்ள விடயங்கள் சுலபத்தில் தீருதலும், பூமி சம்பந்தமான பொருள் சேர்க்கையு காணப்படுகின்றன. இடையிடை சுகக் குறைவு ஏற்படும். இது வாரஇறுதியில் காணப்படும் புத்திர சந்ததி ஏற்பட இடமுண்டு. பெற்றோருக்கு நன்மையான பலன்கள் காணப்படும். மூத்த சகோதரங்களுக்கு சற்று கஷ்டம். வர்த்தகத் துறையினருக்கு எதிர்பார்த்த அளவுக்கு மேல் வருவாயும், சரக்கு விற்பனைக்கு வருமுன் பணம் சேர்தலும் நற்கருமங்கள் ஆரம்பங்களும் காணப்படுகின்றன. பெண்களுக்கு தமது குடும்பத்தில் கஷ்டங்கள் இடையிடை வார இறுதியில் தோன்றி மனத்தை வருத்தும். பணச்செலவும் காணப்படும். மாணவராக இருப்போருக்கு படிப்பில் மேன்மை உண்டாகும். கமத்தொழிலாளருக்கு பலதும் அபிவிருத்தியடைய இடமுண்டு. உத்தியோகத் துறையினருக்கு செய்தொழில் வெற்றி உண்டு. பிதாவுக்கு உத்தியோக பதவியுயர்ச்சிக்கும் இடமுண்டு. அதனல் இடமாற்றமும் நேரும். இவ்விராசியாளருக்கு வரும் சனிபகவான் மாற்றங் காரணமாக கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்திக் கொள்ளாதுவிட்டால் நஷ்டமும் அலைச்சலும் காணப்படும். இவ்விராசியாளருக்கு 15, 16, 21, சுபதினங்களாகவும் 17, 18, 19, 20 அசுபதினங்களாகவும் இருக்கின்றன.

★

## சிங்க இராசி

(மகம், பூரம், உத்திரம் முதலாம்பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு எதிர்ப்புகள் அதிகமாக இருப்பதும் தேகாரோக்கியம் குன்றுதலும் செலவுகள் அதிகரிப்பதும் காணப்படினும் 19-ம் திகதியின்மேல் ஓரளவு நன்மையேற்படும். இதன்பின் பலதுறைகளிலும் அபிவிருத்தி உண்டு. உத்தியோகத்துறையினருக்கு நற்பெயரும் அதிக வேலைகளும் இருக்கும். விருப்பமற்ற பிரயாணங்களை மேற்கொள்ளவும் நேரிடும். கமத்தொழிலிலீடுபட்டுள்ளோருக்கு புதியனவற்றில் தலையிடாது செய்தொழிலையே கையாள்வது நலந்தரும். கல்வி பயிலும் மாணவருக்குச் சோம்பல் ஏற்படும். பெண்களுக்கு தம் துணைவருடைய உடல்நலம் பாதிக்கப்படும். பிறர் நிர்தைசளும் கேட்வேண்டிவரும். சகோதரர்களுக்கும் பிதாவுக்கும் நற்பலன் அதிகமாகலாம். துணைவருக்கு மத்திம பலனுகவும் தாயாருக்கு கஷ்ட பலனுகவும் இருக்கும். குழந்தைகளுக்கு உடல் நலம் பாதிக்கப்படும். இவ்விராசியாளருக்கு சனிபகவான் 16-ல் மாற்றமடைவது காரணமாக நிரந்தரத் தொழிலும், கௌரவங்களும் குடும்ப மேன்மைகளும் பணவசதியும் ஏற்பட்டு குடும்பம் சிறப்புப் பெறும். இவ்விராசியாளருக்கு 17, 18-ந் திகதிகள் சுபதினங்களாகவும் 15, 16, 19, 20, 21 அசுபதினங்களாகவும் இருக்கும்.

★

## கன்னி இராசி

(உத்திரம் பின்முக்கால், அத்தம், சித்திரை முன்னரைமுடிய.)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தகாதவர் சேர்க்கையால் கஷ்டங்கள் விளைதலும், தேகாரோக்கியம் குன்றுதலும் எதிர்பாராத சிறிய விபத்துக்கள் நேருதலும் இவரதுமுயற்சியின்பயனைபிறர்அனுபவிப்பதே தவிர தமக்குப் பயன் கிடையாமையும் குடும்பத்தில் ஒற்றுமைக் குறைவும் வார இறுதியில் அபிவிருத்தியும் காணப்படுகின்றன. பெண்களுக்கு தெய்வவழிபாடுகளும் இல்ல அபிவிருத்திகளும், உறவினர் சேர்க்கையும் காணப்படுகின்றன. கல்வி பயிலும் மாணவருக்கு கௌரவங்கள் ஏற்படுவதுடன் கல்வியில் அபிவிருத்தியும் இருக்கும். கமத்தொழிலாளருக்கு ஓரளவு திருப்தகரமான பலன் கிடைக்கும். வர்த்தகத்துறையினருக்கு அதிக வேலைகளும் அவற்றை முறைப்படி செய்வதால் கௌரவங்களும் காணப்படுகின்றன. வர்த்தகத் துறையிலுள்ளவர்கள் ஒன்றைக் கைவிட்டாலும் மற்ருென்றில் இலாபம் அடைவர். சனிபகவான் மாற்றம் காரணமாக இவ்விராசியாளருக்கு தொழிலில் மேன்மையும் புதிய தொழில்கள் ஆரம்பமும் இயந்திரம் முதலியவற்றினைக் கொள்முதல் செய்தலும் பெரியோர் உதவியும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 15, 16, 19-ந் தேதிகளில் நற்பலன்களும் 17, 18, 20, 21-ந் தேதிகள் அசுகப பலன்களும் நடக்கும்.

★

## துலாராசி

(சித்திரை பின்னரை, சுவாதி விசாகம் முன் முக்கால் முடிய)

இவ் விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகாரோக்கியச் சிறப்பும் முயற்சிகளால் வெற்றியும், வருமான உயர்ச்சியும், பெரியோர் சேர்க்கையும், குடும்ப சுகமும் செலவு அதிகரிப்பும் காணப்படுகின்றன. உத்தியோகத் துறையினருக்கு தொழிலில் அதிருப்தி இருக்கும். சில மாற்றங்களுக்கும் இடமுண்டு. மறதி காரணமாக மேல் அதிகாரிகளுடன் பகைக்க நேருமாகையால் ஞாபக சக்தியை வளர்த்துக்கொள்க. வார இறுதியில் சிறப்பாகக் காணப்படுகிறது. பெற்றோருக்குக் கஷ்டமும் கண்பரும் விரோதியாகும் நிலைமையும் இடையிடை இருக்கும். சுவாதி நட்சததிரத்தி லுள்ளவருக்கு உத்தியோக நன்மை கிட்டும். பெண்களுக்கு பூமி, பொருள் சேர்க்கையும் பெரியோர் சகாயமும் காணப்படுகின்றன. கமத் தொழிலாளருக்கு நல்ல லாபம் கிட்டும். வர்த்தகத் துறையினர் வெளிநாட்டுப் பொருள்களால் இலாபம் மிகவும்அதிகமாகப்பெறுவர். புதிய மாற்றங்களுக்கும் இடமுண்டு. மாணவருக்கு கல்வியில் மேன்மை இருக்கும். சனி பகவான் மாற்றமடைவது காரணமாக இவர்களுக்கு வீண் வேதனைகளும் கர்மத் தொல்லைகளும் தொழிலில் அலைச்சலும் காணப்படுகின்றது. இவ் விராசியாளருக்கு 17, 18, 21-ந் தேதிகள் நற்பலனும் 15, 16, 19, 20-ந் தேதிகள் அசுப பலனும் நடக்கும்.

★

## விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய.)

இவ் விராசியாளருக்கு இவ்வாரத்தில் வீண் செலவுகளும் கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றங்களும் செய் தொழில்கள் பூர்த்தியாகாமல் கஷ்டங்களும், ஆரோக்கியம் குன்றுதலும் கண், பல், தலைவலி உபாதைகளும் எதிரிகளின் தொல்லைகளும் வீண் வார்த்தைகள் கேட்டலும் காணப்படுகின்றன. விவசாயிகளுக்கு நல்ல வருவாய்கிட்டும். வெளி வட்டாரங்களில் கௌரவங்கள் ஏற்படும். உத்தியோகத்துறையினருக்கு தற்காலிக பதவிகள் பண உயர்ச்சிகள் எல்லாம் நீங்கி பழையபடி பதவிகளும் ஊதியமும் கிடைக்கும். ஏமாற்றங்களும் ஏற்படுமாகையால் கவனமாக இருப்பது அவசியம். பெற்றோருடன்கலகம்வேண்டாம். ஆடம்பரங்களைத் தவிர்த்து நடக்கவும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி மட்டுமன்றி பிறர்பாராட்டிப் பரிசுகள் வழங்கவும் செய்வர். கடன் தொல்லைகள் இருக்குமாயினும் தொழில் குறையாது. பெண்களுக்கு பிரசவம் காரணமாக கஷ்டங்கள் இருக்கும். குடும்பத்தில் சுபிட்சமும் பொருள் வரவும் இருக்கும். சனிபகவான் மாற்றங்காரணமாக இவர்களுக்கு கடன் தொல்லைகள் நீங்கி பொருள்-அரசாங்க மதிப்புகள் கிடைத்தலும் செய்தொழில் வெற்றியும் காணப்படுகின்றன. இவர்களுக்கு 15, 19, 20 சுபநாட்களாகவும் 16 17, 18, 21 அசுப நாட்களாகவும் இருக்கும்.

★

## தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம் முடிய)

இவ் விராசியாளருக்கு இவ் வாரத்தில் இரத்த அமுக்கமும் கொதிப்பினல் உடற் கோளாறுகளும் இடப் பிரிவுகளும் நண்பர்- உறவினர் விரோதமும் முன்னேற்றத் தடைகள் ஏற்படுதலும் துணைவருக்கு சுகக்குறைவும், காணப்படுகின்றன. மூத்த சகோதரங்கள்—நண்பர்கள்—பிள்ளைகருக்கு நற்பலன் காணப்படுகின்றது. கமத்தொழிலாளருக்கு சிரமங்கள் குறைந்து ஓரளவு நன்மை கிட்டும். கால்நடை சேதமடையலாம். உத்தியோகத் துறையினருக்கு வெளியூர்ப் பிரயாணங்கள், தொழிலில் ஸ்திரநிலை கிட்டுதல் காணப்படுகின்றன. வர்த்தகத்துறையினருக்கு இலாபம் கிட்டாதெனினும் செய்தொழில் நிலைப்படும். தொழில் அபிவிருத்திக்கான அறிகுறிகளும் தோன்றும். பிதாமாதா சகோதரங்களுக்கு பலன் மத்திமமாகும். கல்விபயிலும் மாணவருக்கு வெற்றியும் பணவசதிகள் கிடைத்தலும் காணப்படுகின்றன. பெண்களுக்கு நற்பலன் இருப்பினும் ஆடம்பரச்செலவினங்கள் காணப்படுகின்றன சனிபகவானது மாற்றம் காரணமாக இவர்களுக்கு முயற்சிகளில் தடையும் வீண் வாக்குவாத குழப்பங்கள் ஏற்படுதலும், விரோதங்கள் வளர்தலும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு 15, 16, 17, 18, 21 சுபநாட்களாகவும் 19, 20 அசுபநாட்களாகவும் இருக்கும்.

★

## மகர இராசி

(உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் அவசிய பிரயாணங்கள் குறிப்பிட்ட திட்டப்படி நடக்காமையால் நட்டங்கள், குழந்தைகள் ஆரோக்கியம் குன்றுதல் ஆதியன காணப்படுகின்றன. மாணவருக்கு கல்வியில் ஊக்கம் குன்றும். உஷ்ணமதிகரிப்பால் தேகத்தில் உபாதைகள் தோன்றும். துணைவருக்கு நன்மையுண்டு. உத்தியோதத் துறையினருக்கு பொறுமை வேண்டும். வர்த்தகத்துறையினருக்கு நிதானம் அவசியம். பொருள் வாங்குவதும் அவற்றைத் தேக்கிவைப்பதும் பின் நன்மை தரும். விற்பனையை இப்பொழுது எதிர்பார்க்காது பொருள் கொள்வனவு செய்க. கமத்தொழிலாளருக்கு மத்திமமான பலனுண்டு. பெண்களுக்கு கஷ்டங்களுக்கு நடுவே சந்தோஷ சம்பவங்கள் இருக்கும். சனிபகவான் மகரத்திற்கு மாற்றமடைந்துவருவதால் இவர்களுக்கு எண்ணியவை கைகூடுதலும் உற்சாகம், பணவசதி தொழில் துறைகளில் இன்பம், குடும்பத்தில் சந்தோஷம், சுபகருமங்கள் நடத்தல், தெய்வ வழிபாடு, கடன்வழிகள் திருப்தி ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு 17, 18, 19, 20 ந் தேதிகள் சுபதினங்களாகவும் 15, 16,

(7ம் பக்கம் பார்க்க)

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்—2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.

# நகரின் மின்சார விநியோகம் பற்றி எம்.எம்.சிக்கள் அதிருப்தி

## மின்சார எஞ்ஜினியர் பதவியை ஒழிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன் மாநகரசபை மின்சார என்ஜினியருக்கு மூன்றுமாத கட்டாய விடுமுறை கொடுத்து இளைப்பாறச் செய்யவேண்டும்; யாழ்ப்பாணம் மாநகரசபை மின்சார பொறியியலாளர் பதவி நசுக்கப்பட்டு இதற்குப் பதிலலாக மின்சார அத்தியட்சகர் பதவி முதலாம் தரம் ஒன்று உண்டுபண்ணவேண்டும்; தற்போதைய மின்சாரப் பொறியியலாளருக்கு மூன்று மாதச் சம்பளம் கொடுப்பதற்கும் வரவுசெலவுத்திட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்ற சகலநிலைய குழுக்களின் சிபார்சுகளை நேற்று நடைபெற்ற மாநகர சபையின் பட்ஜட் கூட்டத்தில் சபை அங்கீகரித்துள்ளது.

இக்கூட்டத்திற்கு மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் நகரத்தின் மின்சார விநியோகம்பற்றி பல அங்கத்தவர்களும் அதிருப்தி தெரிவித்ததோடு தற்போதைய மின்சாரப் பொறியியலாளர் மின்சாரவிநியோகத்தைச் சீர்ப்படுத்துவதில் காட்டிவரும் அலட்சிய மனோபாவம் குறித்தும் வருத்தம் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து சபையில் பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

இறுதியில் இவ்விஷயமாக மேயரின் அபிப்பிராயத்தை சபை கோரியது.

தனிப்பட்ட முறையில் மாநர சபை எஞ்ஜினியரில் தனக்கு எதுவித கோபதாபமுமில்லை யென்று தெரிவித்த மேயர் மின்சார எஞ்ஜினியர் கூடிய ஒத்துழைப்புக்கொடுக்கவில்லை எனவும் இனியும் அவர் ஒத்துழைக்கமாட்டாரெனவும் இதனைல் கமிட்டிகளின் சிபார்சை தாம் ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து கமிட்டிகளின் மேற்கண்ட சிபார்சு அங்கீகரிக்கப்பட்டது.

## கடித்து காயம் விளைவித்தாராம்

பருத்தித்துறை, வியாழன் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த செல்லையா சோமசுந்தரம் என்பவர்மீது இராமலிங்கம் சின்னராசா என்பவரைக் கையால் அடித்தும், கடித்தும் காயம் விளைவித்ததாக பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 35 ரூபா அபராதம் விதித்தார்.

---

கல்கத்தா, டிச. 28

இந்தியாவில் 3 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்தபின் மலாயா மன்னர் தம்பதிகள் இன்று கல்கத்தாவிலிருந்து டாக்கா புறப்பட்டனர்.

## 'காஷ்மீருக்காக போர் புரிவோம்'

### குர்ஷித் உளறல்

கராச்சி, டிச. 28

"காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐ. நா. பந்தோபஸ்து சபையை நம்பியிருப்பதில் பயனில்லை" என ஆசாத் காஷ்மீர் தலைவர் ஜனாப் கே. எச். குர்ஷித் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 அங்கத்தவர்களைக் கொண்ட ஆலோசனைச் சபையினர் முன் பேசுகையிலேயே ஜனாப் குர்ஷித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், காஷ்மீர் விடுதலையடைவதற்காக போர் புரியவேண்டிவரும் எனக் கூறினர்.

---


நான் விரும்புவது

# நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்கவல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

# நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


---

## உங்கள் இராசிபலன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

21 அசுபதினங்களாகவும் காணப்படுகின்றன.

★

**கும்பராசி**

(அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் பொதுவாக நற்பலன் உண்டு. கருமங்கள் திட்டப்படி நிறைவேறும். தேகாரோக்கியம், குடும்பச் சிறப்பு, கடன் பணம் மீள வந்துசேருதல், தர்மவழிபாட்டுப் பணிகள், நோய்திரும், கடன்மறைந்து பொருள் சேருதல் ஆகியன காணப்படுகின்றன. வர்த்தகத் துறையினருக்கு தொழிலில் அபிவிரித்தியும் இலாபமும் காணப்படுகின்றது. உத்தியோகத் துறையினருக்கு பதவி உயர்வும் அதனல் இடப்பெயர்வும் உண்டு கல்வி கற்கும் மாணவருக்கு அலைச்சலும் பணச்செலவும் காணபபடுகிறது. பெண்களுக்கு சந்தோஷ வாழ்க்கையுண்டு. தர்மவழிகளில் பணச்செலவும் துணைவருக்கு கஷ்டம் வந்து மறைதலும் காணப்படுகிறது. வார பிற்பகுதியில் பெரும் அபிவிருத்தியுறபடும். தெய்வவழிபாடு அவசியம். சனிபகவான் தன் விட்டுக்கு மாற்றமடைவதால் இவர்களுக்கு மனக்குழப்பம், பணமுடை, தொழில்கஷ்டம் அற்பபலன் ஆதியன காணப்படுவதால் தீர்க்கமாக ஆராய்ந்து செயல்களைச் செய்தல் வேண்டும். இவர்களுக்கு 19, 20, 21 ந்தேதிகள் சுபதினங்களாகவும் 15, 16, 17, 18-ந் தேதிகள் அசுபநாட்களாகவும் இருக்கும்.

★

**மீன இராசி**

(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)

இவ்விராசியாளருக்கு இவ்வாரத்தில் தேகாரோக்கியம், வருமான உயர்வு, பூமிபொருள் சேருதல், பெரியோர் உற்ருேர் ஆதரவு, சந்ததி அபிவிருத்தி, தர்மவழிகளில் ஈடுபாடு, வாழ்க்கையில் துணைவர் சேர்க்கை, புதிய முயற்சிகளில் தோல்வி, குழந்தைகளின் ஆரோக்கியம் குன்றல் ஆதியன காணப்படுகின்றன. பெண்களுக்கு கருதோஷங்களில் அவஸ்தைகளும் கவலைகளும் இருக்கும். உத்தியோகத் துறையினருக்கு பொறுப்பும் மதிப்பும் பெருகும். வர்த்தகத்துறையினருக்கு உயர்வும் வருமானமும் அதிகரிக்கும். கமத்தொழிலாளருக்கு செய்தொழிலில் ஆதாயமும் கால்நடை, தானிய அபிவிருத்தியும் காணப்படுகிறது. மாணவருக்கு வெற்றியும் சிறப்பும் கிடைக்கும். இவர்களுக்கு சனிபகவான் மாற்றத்தால உற்சாகக் குறைவும் திடீர்க் குழப்பங்களும் மனப்பீதியும் செய்தொழில் மந்தமும் காணப்படும். இவர்களுக்கு 15, 21-ந் தேதிகள் சுபதினங்களாகவும் 16, 17, 18, 19, 20 ந் தேதிகள் அசுபதினங்களாகவும் இருக்கும்.

# "விசாரணையினுல் உண்மை, பொய் வெளியாகவில்லை"

## ஊரெழு கொலை வழக்கில் ஜி. ஜி. தொகுப்புரை முடிந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

"இந்த வழக்கு முழுவதும் தொடர்புடையதாக இல்லை. ஆனுல் சந்தேகத்தை உண்டுபண்ணுவதற்கு போதிய சாட்சியங்கள் உண்டு. குற்றச் சாட்டுகளின் உண்மை பொய் விசாரணையினுல் வெளி வருவதாகவில்லை" என்று ஊரெழு கொலை வழக்கில் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று இரண்டாம் நாள் தொகுப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஊரெழு கொலை வழக்கில் வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி தமது தொகுப்புரையை புதன்கிழமை ஆரம்பித்தார். நேற்றுடன் அவரது தொகுப்புரை முடிந்தது.

மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலை செய்ததாகவும் கொலைக்குரிய சாட்சியங்களை மறைத்து வைத்ததாகவும் குற்றஞ்சாட்டி ஓய்வு பெற்ற மராமத்து ஓவர்சியர் திரு. செல்லையா என்பவரின் பணியாள் சுப்பையா மாடசாமி, முத்து முத்துச்சாமி என்னும் கார் சாரதி திரு. செல்லையாவின் மகள் செல்வி சரஸ்வதி ஆகியோர் மீது சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. கே. செபாலை இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஏ. எஸ். மரியநாயகம் திரு. கே. செபமாலையின் உதவியுடன் வழக்கை நடத்திஞர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. திரு. எஸ். எம் சாஹீத்தின் உதவியுடன் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் முதலாம் மூன்ரும் எதிரிகளின் சார்பில் ஆஜராஞர். திரு. டி. கணேசலிங்கம் திரு ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் இரண்டாம் எதிரியின் சார்பில் ஆஜராஞர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமது தொகுப்புரையில் குறிப்பிட்டதாவது:-

கொலைக்காக சதி எதுவும் நடந்ததா அல்லது கொலை செய்யப்பட்ட பின்னர் அதற்கான சாட்சியங்கள் மறைக்கப்பட்டதா என்பது விசாரணையினுல் புலனுகவில்லை.

முதலாம் இரண்டாம் எதிரிகள் ஒன்று சேர்ந்து சடலத்தை காரில் ஏற்றிச் சென்ருர்கள் என்பதற்கு சாட்சியமெதுவுமில்லை. காரில் சடலம் இருந்தது என்பதற்கும் எதுவிதசாட்சியமுமில்லை.

மூன்ருவது எதிரி எக்குற்றச் சாட்டுகளுக்குள்ளும் மாட்டுப்பட்டிருக்கவில்லை. ஆகையினுல் மூன்ரும் எதிரியையும் விடுதலை செய்ய வேண்டும்

சதித்திட்டம் எதுவும் முடிக்குரிய தரப்பினரால் நிலைநாட்டப் படவில்லை.

ஜனவரி மாதம் 15-ந் திகதி இரண்டாவது எதிரியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் தமது தொகுப்புரையை நிகழ்த்துவார்.

### தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் ஜெமினி கணேசன், பத்மினி நடித்த மீண்டசொர்கம்.

யாழ்ப்பாணம் மஞேகரா சிவாஜி கணேசன், சாவித்திரி நடித்த காத்தவராயன்.

சாவகச்சேரி தேவேந்திரா ரஞ்சன் நடித்த "மன்னன் மகள்"


விரைவில் வருகிறது!

சினிமாஸ் திரைகளுக்கு

★ படம் என்பார் சிலர்!

★ பாடம் என்பார் பலர்!!

★ பாசத்தேன் குடம் இது!!!

என பலரின் பாராட்டைப் பெறவருகிறது



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

ராஜாமணி பிக்சர்ஸ்

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30, இரவு 9-30க்கும்

ஜெமினி கணேசன் பத்மினி நடித்த

மீண்டசொர்கம்

மஞேஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

சிவாஜி கணேசன், சாவித்திரி நடித்த

காத்தவராயன்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## ஐ. நா. சபைக்கு காஷ்மீர் பிரச்சினை

கராச்சி, டிச. 28

அடுத்த வருடம் ஜனவரியில் காஷ்மீர் பிரச்சினையை ஐ நா. பந்தோபஸ்து சபையில் பாகிஸ்தான் எழுப்பப் போவதாக ஐ. நா. விலுள்ள பாகிஸ்தானின நிரந்தர பிரதிநிதி சேர் முகமது ஸபருல்லாகான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசாங்கத்திடமிருந்து இது சம்பந்தமாக தமக்கு இவ்வார இறுதியுள் தகவல் கிடைக்குமென்றும் பின்னர் தாம் பந்தோபஸ்து சபைக்கு இப்பிரச்சினை பற்றி விவாதிக்க அனுமதி கோரப் போவதாகவும் சேர் ஸபருல்லாகான் மேலும் அறிவித்துள்ளார்.

## 6 மாதக் கடுங்காவல்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த எஸ். தர்மலிங்கம் என்பவருக்கு சொந்தமான ரு. 100 பெறுமதியுள்ள சைக்கிளை நம்பிக்கை மோசடி செய்ததாக பரந்தனைச் சேர்ந்த சிறிசேஞ என்பவர்மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன், எதிரிக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

## முப்படைத் தலைமை சுகர்ஞே ஏற்ருர்

ஜாகர்த்தா, டிச. 28

இந்தோனேஷிய முப்படைகளின் கூட்டுத்தலைமைப் பதவியை ஜஞதிபதி டாக்டர் சுகர்ஞே தாமே இன்று ஏற்றுக்கொண்டார்.

### விற்பனைக்கு

1 ஸ்ரீ2366 இலக்கங்கொண்ட கறுப்புநிற "கொன்சல்" கார் விற்பனைக்குண்டு. 40,000 மைல்கள் வேலைசெய்துள்ளது. நல்ல நிலைமையிலுள்ளது. 8000 ரூபா வரை பெறுமதியுள்ளது. விபரங்களுக்கு—மகிழராசன், ஹட்செரீஞ, சண்டிலிப்பாய்.

# பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த தயார்!

## நேரு அறிவிப்பு

புதுடில்லி, டிச. 28

"காஷ்மீர் சம்பந்தமாக இப்போதைய நிலைமை ஏற்றுக்கொள்ளப்பட்டால் சில மாறுதல்கள் பற்றி பாகிஸ்தானுடன் பாரதம் பேச்சுவார்த்தை நடத்துவது சாத்தியம்" என்று பாரதப்பிரதமர் ஸ்ரீ நேரு இன்று பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் ஒரு நிருபரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

எந்தப் பிரச்சினை பற்றியும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாரதம் தயாராக இருக்கிறது என்று ஸ்ரீ நேரு கூறினர்.

இந்தியப் பிரதேசத்தில் சீனர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்து சீனரை வெளியேற்ற பாரதம் படை பலத்தை உபயோகிக்குமா? என்று ஒரு கேள்விக்கு பிரதமர் நேரு பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

இந்தியப் பிரதேசத்திலிருந்து சீனரை வெளியேற்றுவதற்கு படை பலத்தை உபயோகிப்பது, சமாதானப் பேச்சுவார்தை மூலம் முயற்சிப்பது ஆகிய இரண்டு வழிகளுண்டு. இந்த முறைகளை எடபொழுது உபயோகிப்பதென்பது சூழ்நிலைமைகளின் அம்சங்களைப் பொறுத்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டியது.

கோவாவில் கைது செய்யப்பட்ட போர்ச்சுக்கீஸிய கைதிகளின் நிலைமை பற்றிய ஒரு கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில் அவர்களை போர்ச்சுக்கலுக்கு அனுப்புவது பற்றி ஆலோசனை செய்யப்படுகிறதென்ருர்.

போர்ச்சுக்கலின் ஆதிக்கத்திலுள்ள நாடுகளிலுள்ள இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளது பற்றியும் அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது பற்றியும் ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு ஸ்ரீ நேரு பதிலளிக்கையில் இது சம்பந்தமபக நேச நாடுகளை பாரதம் அணுகியிள்ளதென்ருர்.

கோவா விடுதலை சம்பந்தமாக பாரதம் எடுத்த நடவடிக்கைக்கான காரணம்பற்றி ஸ்ரீ நேரு விரிவாக விளக்கிக் கூறினர்.

போர்ச்சுக்கல் கப்பல் சூயஸ் கால்வாய் வழியாகவருவதற்கு அனுமதி கோரியதுமில்லை. அந்தக் கப்பலை ஐக்கிய அரபுக்குடியரசு தடுத்து நிறுத்தி வைக்கவில்லையென்றும் நேரு கூறினர். கோவாமீது நடவடிக்கை எடுக்குமுன் சோவியத் ஜனதிபதி பிரஸ்னேவுடன் யோசனை செய்யவில்லையென்றும் ஸ்ரீ நேரு கூறினர்.

## அமெரிக்காவால் முடியும்!

வாஷிங்டன், டிச. 28

வானவெளியில் 280 லட்சம் மைலுக்கப்பால் பரிசோதிக்கக் கூடிய 100 மெகாடன் சக்தியுள்ள அணுக்குண்டுகளைக்கூட அமெரிக்காவால் கண்டுபிடிக்க முடியுமென அணுசக்தி கமிஷனைச்சேர்ந்த ஒரு விஞ்ஞானி தெரிவித்தார்.

## கடாங்கா வீரர் ஐ. நா. வீரர்களைத் தடுத்தனர்!

எலிஸபெத்வில்லி, டிச. 28

கடாங்கா வீரர்கள் ஐ நா. வைச் சேர்ந்த 7 சுவீடிஷ் வீரர்களைத் தடுத்துவைத்திருப்பதாயும் அவர்களது விடுதலை சம்பந்தமாய் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாயும், அறிவிக்கப்படுகிறது.

## போர்ச்சுக்கல் தபால் முத்திரைகள் கோவாவில் இனி செல்லுபடியாகாது

பஞ்சிம், டிச. 28

கோவாவில்இதுவரை புழக்கத்திலிருந்து வந்த போர்ச்சுக்கீசிய தபால் முத்திரைகளும் தபால் அட்டைகளும் நாளையிலிருந்து செல்லுபடியாகாதென்றும் இவற்றுக்குப் பதிலாக பாரத தபால் தலைகளும் தபால் அட்டைகளும் புழக்கத்துக்கு வருமென்றும் கோவா கவர்னர் ஜெனரல் காண்டெத் ஒரு உத்தரவில் தெரிவித்துள்ளார்.

# ராணுவத்தை

(1-ம் பக்கத் தொடற்சி)

ச்சிக்கும் இலங்கையில் இப்பொழுது போலுள்ள தொழிற் சட்டத்தைப்போல்வேறெங்கும் காணமுடியாது. காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தின்கீழும் இன்றைய ஆட்சியிலும் தொழிற் சங்கவளர்ச்சி அதிகரித்துள்ளது.

இப்பொழுதுநடைபெறுவது போன்றவேலைநிறுத்தங்களால் தொழிற்சங்கங்களின் வளர்ச்சி குன்றிவிடாதா?என்றுதொழிற் சங்கத்தலைவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

இப்பொழுது நடைபெறும் வேலைநிறுத்தத்தினுல் தொழிலாளர்கள் தங்களுக்குக்கிடைக்கவேண்டிய கணிசமான தொகையை இழந்துவிட்டனர்.

### சம்பளவிகிதம் கூட்டமுடியாது

நாட்டின் நிதிநிலைமை திருப்திகரமாகும்வரை சம்பள விகிதத்தைஅதிகரிக்க முடியாதென்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

எனவே நாட்டு மக்களின் நலனை உத்தேசித்தும் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையை உணர்ந்தும் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு உடனடியாக வேலைக்குத் திரும்புமாறும் உத்தேச ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்திஞல் நாட்டுக்கும்மக்களுக்கும் தங்களுக்கும் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தைக் கைவிடும்படியும் சம்பந்தப்பட்ட எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

துறைமுகத் தொழிலாளர்கள் வேலைககுத் திரும்பிஞல் அங்கு ஒரு கணமே ராணுவத்தினர் இருக்கவேண்டிய அவசியமேற்படாது.

## ஜயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

20 எம். பி. க்கள் கட்சியை விட்டுப் பிரியப்போவதாயும், அப்படிப்பிரிந்தால், தான் ராஜிஞமாச் செய்து விடுவதாக பிரதமர் அச்சுறுத்தியிருப்பதும் உண்மையா? இதைப்பற்றி ஏன் நீங்கள் ஒன்றும் கூருமல் மூடிமறைக்கிறீர்கள்?" என்று கேட்கின்ருர்.

முதலாவதாக, இப்போது நடப்பது அவசரகாலம். பத்திரிகை தணிக்கை நீங்கவில்லை. கண்ஞே காதோ நமஸ்காரம். கண்டதை கேட்டதை சொல்லாதே என்று இருக்க வேண்டும். அதஞல்தான் அரசியல் விமர்சனம் கூட செய்ய முடியாமலுள்ளது.